Registerad as a News Pape? பக்கங்கள் 06 விலை ரூபா: 6-00

Y.M.C.A.

# ஈழநாதம்

வெள்ளி மஞ்சரி

நாதம் 03 திருவள்ளுவர் ஆண்டு 2203 ஐப்பசி 28 (13-11-1992) வெள்ளிக்கிழமை ஓசை 269

## யாழ். பல்கலைக்கழகத்தில் 160 மாணவர்கள் வெற்றிடம்

யாழ். பல்கலைக்கழகத்தில் புதிய கல்வி ஆண்டில் 160 மாணவர் அனுமதிக்கான வெற்றிடங்கள் உள்ளதாக தெரியவருகிறது. கலைத் துறையில் 17 வெற்றிடங்களும், வர்த்தகத்துறையில் 12 வெற்றிடங்களும், முகாமைத்துவத் துறையில் 11 வெற்றிடங்களும், மருத்துவத்துறையில் 6 வெற்றிடங்களும், உயிரியல் விஞ்ஞானத் துறையில் 25 வெற்றிடங்களும், கணிதவிஞ்ஞானத் துறையில் 78 வெற்றிடங்களும், விவசாயத் துறையில் 11 வெற்றிடங்களும் உள்ளன. இவ்வாறு உள்ள வெற்றிடங்கள் குறித்து பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவுக்கு அறிவிக்கப்பட்டிருப்பதாக தெரியவருகிறது. (க)

# கிழக்கில் 'ஜயபார' நடவடிக்கை வெற்றியைக் கொடுக்கவில்லை

## படையின் ஒரு பகுதியினர் அதிருப்தி

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் இவ்வார ஆரம்பத்தில் மேற்கொள்ளப்பட்ட 'ஜயபார' இராணுவ நடவடிக்கை குறித்து சிறிலங்கா இராணுவத்தின் ஒரு பகுதியினர் அதிருப்தி தெரிவித்துள்ளதாக ஏஜென்சி செய்திகள் தெரிவிக்கின்றன. பெயர் குறிப்பிட விரும்பாத இராணுவ அதிகாரி ஒருவர் இவ் இராணுவ நடவடிக்கையால் புலிகள் எதுவிதபாதிப்பையும் அடையவில்லை எனவும், கூட்டுப்படை நடவடிக்கை தலைமையின் கீழ் இடம் பெற்ற இந் நடவடிக்கை ஒரு பிரசாரமாக அமைந்ததே ஒழிய வேறு எதுவுமில்லை எனவும் தெரிவித்தார்.

முப்படைத் தளபதிகள் மற்றும் பொலிஸ் மா அதிபரிடம் இருந்து கூட்டுப்படை தலைமையகத்திடம் அதிகாரங்கள் ஒப்படைக்கப்பட்ட பின்னர் நடைபெற்ற முதலாவது பெரியஇராணுவ நடவடிக்கையான இத்தாக்குதல் நடவடிக்கையில் ஆயிரக்கணக்கான துருப்புக்களும் பயன்படுத்தப் பட்டன.

கிழக்கில் விடுதலைப் புலிகளை ''துப்புரவு செய்யும்'' முதல் கட்ட நடவடிக்கையே ''ஒப்பரேசன் ஜயபார'' என தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால், இவ் இராணுவ நடவடிக்கையால் எதிர் பார்த்த வெற்றியை இராணுவம் அடைய முடியவில்லை.

இதேவேளை இந்த இராணுவ நடவடிக்கை குறித்து அதிருப்தி வெளியிட்டுள்ளவர்கள் இந்நடவடிக்கை எதுவித பயனையும் வழங்கவில்லை, பொருள்செலவை மட்டுமே ஏற்படுத்தியுள்ளது எனத் தெரிவித்துள்ளதோடு, நடவடிக்கையில் ஈடுபட்ட இராணுவத்தினர் விடுதலைப் புலிகளின் முக்கிய முகாம்களில் ஒன்றைத்தானும் கைப்பற்ற முடியவில்லை எனவும் தெரிவித்தனர். அத்தோடு, இந் நடவடிக்கை கிழக்கு மாகாணத்திலுள்ள புலிகளை எந்த வகையிலும் பாதிப்பிற்கு உள்ளாக்கவில்லை எனவும் தெரிவித்தனர்.

## ஹெலிசுடப்பட்டது குறித்து விசாரணைக்கு உத்தரவு

(கொழும்பு)

அம்பாறை மாவட்ட காட்டுப் பகுதியில் கடந்த திங்கட் கிழமை விடுதலைப்புலிகளால் சுட்டு வீழ்த்தப்பட்ட உலங்கு வானூர்தியில் பயணம் செய்த ஒரு விமானி கொல்லப்பட்டதுடன் மூவர் படுகாயமடைந்தனர் எனக் கொழும்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

அம்பாறை மாவட்டத்தில் நடைபெற்ற இராணுவ நடவடிக்கைகளின் போது சிறிலங்கா இராணுவத்தினருக்கு உதவியாக வான்பரப்பில் தாக்குதல்களை நடாத்திவிட்டு வட்டப்புழுவ விமான நிலையத்திற்கு திரும்பும் வழியிலேயே 'ஜெட் ரேஞ்சர்' என்ற உலங்கு வானூர்தி சுட்டுவீழ்த்தப்பட்டது. இதன்போது நான்கு விமானிகள் இதில் இருந்தனர் இவர்களில் கொல்லப் பட்டவர் கபிலபெரேரா

## அலம்பிலில் படையினரால் நூற்றுக்கு மேற்பட்ட வீடுகள் தகர்ப்பு

வீரச்சாவு



2-ஆம் லெப்டினன்ட் அறிவழகன்



ஆசிரியர் நியமனங்கள்

## அந்தந்த மாவட்டங்களில் நேர்முகப் பரீட்சை

எதிர்காலத்தில் வடக்கு-கிழக்கு மாகாண ஆசிரிய நியமனங்கள் தொடர்பாக நேர்முகப் பரீட்சைகள் அனைத்தும் சம்பந்தப்பட்ட மாவட்டங்களிலேயே நடாத்தப்படும்.

தமிழர் ஆசிரியர் சங்க தூதுக் குழு வட-கிழக்கு மாகாண ஆளுநர் நளின் செனிவிரட்னாவையும், மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எம். ஏ. காதர் மொகைதீனையும் சந்தித்து உரையாடியதனைத் தொடர்ந்து மேற்படி முடிவெடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மேலும் ஏனைய பிரதேசங்களில் வழங்குவது போல சமகாலத்தில் வட மாகாணத்தில் இராணுவ கட்டுப்பாடில்லாத பகுதிகளிலும் மாணவர்களுக்கு சீருடை வழங்குவதற்கும், 1990 யூன் மாதம் தொடக்கம் டிசம்பர் மாதம் வரைக்கான காலப்பகுதிக்கு வடமாகாணத்திலுள்ள சகல அதிபர்கள், ஆசிரியர்கள், திணைக்கள ஊழியர்களுக்கும் ஆபத்துக்கால ஊக்குவிப்பு அலவன்ஸ் கொடுத்தல் 1991 அக்டோபர் தொடக்கம் இன்றுவரை தீவகப்பகுதி அதிபர் ஆசிரியர்களுக்கு வழங்கப்படாதிருக்கும் சம்பளத்தை எதிர்காலத்தில் மாதாமாதம் வழங்குவதற்கும் முடிவெடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## போதை மருந்தூட்டி ரயில்பயணிகளிடம் கொள்ளை

(வவுனியா)

வவுனியா ரயில் நிலையத்தில் பயணிகளுக்கு போதை மருந்தூட்டி கொள்ளையிடும் சம்பவங்கள் அண்மைக்காலத்தில் அதிகரித்து செல்வதாக கூறப்படுகிறது.

கடந்த திங்கள் இரவு ரயில் பயணத்தின் போது ஒருவர் கொடுத்த கோப்பியினை அருந்தியதால் சுயநிலையை இழந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நான்கு வடபகுதிப்பயணிகள் தங்கள் உடைமைகள் அனைத்தையும் பறிகொடுத்துள்ளனர்பின் இவர்கள் சிகிச்சைக்காகவவுனியா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை மற்றுமோர் பெண்மணி இனந்தெரியாத நபர் ஒருவர் மயக்கமருந்து நிறைந்த பிஸ்கட்டை கொடுத்த போது அதைச் சாப்பிட்டதால் மயங்கிய நிலையில் வவுனியா ரயில் நிலையத்தில் சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

## முல்லை. மாவட்டத்திற்கு பட்டதாரி ஆசிரியர் நியமனம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் பட்டதாரி பயிலுனர் உதவி ஆசிரியர்களாக பதினொரு பேருக்கு நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இவ் ஆசிரிய நியமனங்கள் கிடைக்கப்பெற்றோரின் பெயர் விபரங்கள் கீழே தரப் ... மாறு;

திரு. வி.உமாசங்கர், நாயன் மார்க்கட்டு, யாழ்ப்பாணம். திருமதி கே. சிவயோகன், மீசாலை தெற்கு, மீசாலை. எல். சாந்தினிகோகிலா, உடுப்பிட்டி. எம்.தேவசேனை, உரும்பராய் மேற்கு.ஏ.பேரின்பநாயகி, பலாலி வீதி, யாழ்ப்

கிடைக்கப்பெற்றோரின் பெயர் விபரங்கள் கீழே தரப்படுகின்றன. இவர்கள் அனைவரையும் முல்லைத்தீவு கல்வித்திணைக்களத்துடன் உடனடியாக தொடர்பு கொள்ளுமாறு முல்லைத்தீவு பிரதேசக் கல்விப்பணிப்பாளர் வே. சுப்பிரமணியம் அறிவித்துள்ளார்.

நியமனம் பெற்ற ஆசிரியர்களின் பெயர் விபரங்கள் வரு

உரும்பராய் மேற்கு.ஏ.பேரின்பநாயகி, பலாலி வீதி, யாழ்ப்பாணம். எஸ். திவாகரன், கரவெட்டி. வி. கருணாகரன், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். எஸ்.அனுஷா, உடுவில் றோட், மானிப்பாய் ஏ.எம்.வி கீதா பொன்கலன், கிழக்கு வீதி, மண்டைதீவு.எஸ். முருகையா, புதுக்குடியிருப்பு. என்.இரவீந்திரகுமரன், புதுக்குடியிருப்பு.

முல்லை. மாவட்டத்தில் மாவீரர்நாள் ஏற்பாடுகள்

(முல்லைத்தீவு)

எதிர்வரும் மாவீரர் தின விழாவையொட்டி அதற்கான ஏற்பாடுகள் முல்லை மாவட்டத்தில் வெகுசிறப்பாக நடைபெற்று வருகின்றது.

முல்லை மாவட்டத்தின் ஐந்து பிரதேசங்களாகிய முல்லைத்தீவு, மணலாறு, புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான், நெடுங்கேணி போன்ற பிரதேசங்களில் விழா ஏற்பாடுகள் துரிதகதியில் நடைபெற்றுவருவதாகவும் மக்கள், விழாஒழுங்குகளை மிகச் சிறப்பாக செய்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பந்தல் அமைத்தல், அலங்கார வளைவுகள் அமைத்தல், தெருக்கள் செப்பனிடல், சுவர்களிற்கு வெள்ளையடித்தல் போன்ற வேலைகள் இப்போதிருந்தே ஆரம்பமாகிவிட்டன.

இவை தவிர புதுக்குடியிருப்பு நகரில் சிறந்த முறையில் மாவீரர் பசுஞ்சோலை ஒன்றும் அமைக்கப்பட்டு வருகிறது. மேற்படி வேலைத்திட்டத்திற்கு பொது மக்கள் இரவு பகல் பாராது தமது ஒத்துழைப்பை நல்கி வருகின்றனர்.

(முல்லைத்தீவு)

அலம்பில் பகுதியில் நிலைகொண்டிருந்த சிறிலங்கா இராணுவத்தினர் அப்பகுதியிலிருந்த 100 க்கு மேற்பட்ட வீடுகளை தகர்த்து விட்டுச் சென்றுள்ளனர்.

இப்பகுதியில் நிலைகொண்டிருந்த சிறிலங்கா இராணுவத்தினர் கடந்த மூன்றாம் திகதி கடல் வழியாக பின்வாங்கிச் சென்றமை தெரிந்ததே.

அத்துடன் அலம்பில் தமிழ்க் கலவன்பாடசாலை, அலம்பில் தேவாலயம் என்பன தரைமட்டம் ஆக்கப்பட்டுள்ளன. சிறிலங்கா இராணுவம் தங்கியிருந்த இரண்டு வீடுகள் மட்டுமே எஞ்சியுள்ளன.

அங்கிருந்தபெருமளவு தென்னைமரங்கள் காவலரண்கள் அமைப்பதற்கென சிறிலங்கா ராணுவத்தால் தறித்துவீழ்த்தப்பட்டுள்ளன.

அத்துடன் அப்பகுதியில் பெருமளவு மிதிவெடிகளையும் புதைத்துவிட்டுச் சென்றுள்ளனர்.

வெளியேறிய மக்கள் மீளக் குடியேற்றம்

(முல்லைத்தீவு)

அலம்பில் இராணுவமுகாம் படையினரால் கைவிடப்பட்டதைத் தொடர்ந்து அப் பகுதியிலிருந்து வெளியேறியிருந்த மக்கள் மீளச்சென்று குடியேறியுள்ளனர்.

செம்மலை, குமுழமுனை, நாயாறு, உப்புமாவெளி, ஐந்தாம் கட்டை, சிலாவத்தை, உடுப்புக்குளம், ஆறுமுகத்தான்குளம் பகுதிகளைச் சேர்ந்த மக்கள் தமது சொந்த இடங்களுக்கு சென்று குடியேறியுள்ளனர்.

அலம்பில்பகுதியில் இராணுவத்தால் புதைக்கப்பட்ட மிதிவெடிகள் அகற்றப்பட்டதும் அங்குமக்கள் குடியேறுவர்என தெரிவிக்கப்படுகிறது.

லப் பட்டவர் கபிலபெரேரா என்ற விமானியாவார். மற்றும் அமரசிங்கா, நிஹால் கருணாரத்ன ஆகிய இரு விமானிகளும் தலைமை ஸ்குவாட்ரனும் படுகாயமடைந்தனர். இவர்கள் மூவரும் உடனடியாக கொழும்பிற்கு கொண்டுவரப்பட்டு அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டனர் எனவும் அச் செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன.

இதேவேளை மேற்படி சம்பவம் தொடர்பாக உடனடியாக அதிகாரிகள் சகிதம் ஸ்தலத்திற்கு விரைந்த விமானப் படைத் தளபதி ஏயார் வைஸ்

(6 ஆம் பக்கம் பார்க்க)



வீரவேங்கை
தேவகி

09-11-1992 அன்று காலை 9.00 மணியளவில் ஆனையிறவில் ஏற்பட்ட வெடிவிபத்தொன்றில் விடுதலைப்புலிகள் போராளி 2 ஆம் லெப்டினன்ட் அறிவழகன் (தயானந்தன்-இராமையா மனோகரன் கந்த

( 6 ஆம் பக்கம் பார்க்க )

நாம் தமிழர் என்பதை மறந்துவிடக்கூடாது

- தொண்டமான்

(கொழும்பு)

நாம் அனைவரும் தமிழர்கள் என்பதை எந்த சந்தர்ப்பத்திலும் மறந்துவிடக்கூடாது நாம் வடக்கில் இருந்தாலும், கிழக்கில் இருந்தாலும் மலையகத்தில் இருந்காலும் நாம் தமிழர்கள்தான். நாம் யாருக்கும் அஞ்சி பயந்து வாழவேண்டிய அவசியமில்லை.

இவ்வாறு இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவரும் சுற்றுலா கிராமிய தொழில் துறை அமைச்சருமான எஸ்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

தொடர்ச்சியான மழையினால் அகதிகள் பெரும் அவதி

முகாம் பகுதிகளில் வெள்ளம்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் நேற்றுத் தொடர்ச்சியாக பெய்த மழையினால் அகதிகளாக ஆலயங்களிலும், பாடசாலைகளிலும், முகாம்களிலும் தங்கியிருந்த மக்கள் பெரும் அவஸ்தைக்குள்ளாகினர்.

கடந்த கால இராணுவ நடவடிக்கைகளால் 30,000 றகு மேற்பட்ட குடும்பங்களைச் சேர்ந்தோர் அகதிகளாக இடம் பெயர்ந்தனர். இவர்கள் ஆலயங்கள், பாடசாலைகள் ஆகியவற்றில் தங்கவைக்கப்பட்டுள்ளதுடன் சிலர் புதிதாக அமைக்கப்பட்ட குடிசைகளிலும் தங்கவைக்கப்பட்டமை தெரிந்ததே.

நேற்று யாழ்.குடாநாட்டில் பரவலாகப் பெய்த இக் கடும் மழையினால் அகதிகள் தங்கியிருந்த பல இடங்களை வெள்ளம் சூழ்ந்துள்ளது இதனால் இவர்கள் அப்பகுதிகளிலிருந்

(6 ஆம் பக்கம் பார்க்க)

தாயகக் கனவினைச் சுமந்தவாறு கல்லிலும் முள்ளிலும் நடந்தவர்கள்

இந்த மண்ணுக்காய் மாண்டவர்கள், மக்களை, வாழும் மண்ணை நேசித்ததால், தம்மை நினைத்துப்பார்க்கவே நேரமில்லாது போனவர்கள். நாங்கள் சுதந்திரக் காற்றைச் சுவாசிப்பதற்காய் தம் சொந்தங்களைப் பிரிந்தவர்கள். அதனாலேயே எம் சொந்தமாகிப் போனவர்கள். இவ்வாறு மாவீரர்களை நினைவு கூரும்முகமாக விடுதலைப்புலிகள் யாழ். மாவட்ட அரசியல் துறை வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தாயகக் கனவினைச் சுமந்தவாறு கல்லிலும், முள்ளிலும் கால் சோராது நடந்தவர்கள். விடுதலைக் காவியப் பாடுவதற்காய் காவலில் நின்றவர்கள். கனவு நிறைவேற முன்னரே காணாமல்போனவர்கள். எட்டுத்திசை அதிர, எதிரிப்படை நடுங்க, அணி நடந்த வேங்கைகள். எங்களுக்காகவே தங்களை அழித்தவர்கள். நீயும் நானும் நிம்மதியாய் வாழ்வதற்காய் கடலலையுள் கரைந்துபோனவர்கள்; காற்றோடு கலந்து போனவர்கள். எதிரி முகாமுள் நுழைந்து சிதறிப் போனவர்கள்; பகையைச் சிதற வைத்தவர்கள்.

எல்லைகளுக்கு அப்பாலுள்ள எதிரிகளையும் எரித்தவர்கள். எம்மினத்தை ஏய்க்க நினைப்பவரைக் கூட இல்லாதொழித்தவர்கள். அதனாலேயே எம் விடுதலைப்பாதையில் விளக்கேற்றியவர்கள். தீயரைப் பொசுக்க எரிமலையாய் கனன்றவர்கள். இவர்கள் எங்கள் மாவீரர்கள் என மேலும் தெரிவிக்கப்படுகிறது.

அமைச்சர் சென்ற விமானம் தரையிறங்க முடியவில்லை

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் நேற்றுக் காலை பலத்த காற்று வீசியதால் அமைச்சர்களை ஏற்றிச் சென்ற விமானம் தரையிறங்க முடியாது கொழும்பு திரும்பியது.

அமைச்சர்கள் பி. தயாரத்னா, ஏ.ஆர். மன்சூர், டெ. ஏ. சீடுதல் டஜீத் ஆகியோர் இந்த விமானத்தில் பயணம் செய்தனர்.

சூறாவளி வேகம் தணிந்தது இன்றும் மழை பெய்யும்

இலங்கைக்குள் நேற்று நண்பகல் 12.00 மணிக்கும் 2.00 மணிக்கும் இடையே புகுந்த சூறாவளி பெரும் சேதம் எதனையும் விளைவிக்கவில்லை எனத்தெரிவிக்கப்படுகிறது. எனினும்இலங்கைமுழுவதிலும் கடும் மழை பெய்துள்ளது.

சூறாவளியின் வேகம் தற்பொழுதுமணித்தியாலத்திற்கு 15கிலோமீற்றர் ஆகக்குறைந்து வடமேற்கு திசையில் நகர்ந்து இன்றுகாலை புத்தளத்திற்கும்

[6ஆம் பக்கம் பார்க்க]

உழவும் தொழிலும் உனைக்காக்க
வளமாய்த் தேக்கு வருநீரை

# வரி விளம்பரம்

## மாணவ வழிகாட்டி

1992 கல்விப் பொதுத் தராதரப்பத்திரம் சாதாரண தரம் தேர்விற்குத் தோற்றும் மாணவ சமுதாயத்திற்கான வழிகாட்டி சித்திரம் (ஆண்டு 11) ஆக்கம் 'யசோ' (ஆசிரியர்—சித்திரம் வினா விடை) எங்கும் கிடைக்கும். (3616)

## ஜாம் வெற்றுப் போத்தல்கள் தேவை

ஜாம் வெற்றுப் போத்தல்கள் உடனடியாக தேவை நியாயமான விலைக்கு பெற்றுக் கொள்ளப்படும். வேலவன் ஸ்ரோர், நல்லூர் கோயில் முன்பாக. ((3634)

## விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள C. D 50 (HONDA) மோட்டார் சயிக்கிள், ஏசியா சயிக்கிள் Gens Bicycle (Japan) உடன் விற்பனைக்குண்டு. விலாசம்: S. P. செங்காபரம் வினாசித்தம்பி வீதி, (அரசினர் ஆஸ்பத்திரிக்கு முன்பாக) சாவகச்சேரி. (3633)

## பற் சிகிச்சை நிலையம்

பற் சிகிச்சை நிலையம், (கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு எதிரில் கே கே எஸ் வீதி, கொக்குவில்) தினசரி; 4 பி. ப. — 6 பி. ப. ஞாயிறு; 10 மு. ப. — 2 பி. ப. (3215)

## தென்மராட்சி வாடிக்கையாளர்கட்கு

தென்மராட்சி மக்களுக்கு டில்காவின் சேவை! உங்கள் கடிகாரங்கள், றேடியோக்கள் யாவும் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும். சகல பற்றறிகளும் எம்மிடம் உண்டு டில்கா வாச்வேக்ஸ் பஸ் நிலையம், சாவகச்சேரி. (சி-5400)

## நீம் சுகாதார தூபம்

நீம் சுகாதார தூபம், ஓர் இயற்கை நுளம்பு விரட்டி. நுளம்பு பெருகிட நோயும் பரவிடும். பாதுகாப்புப் பெற உள்ளூர் உற்பத்தியான நீம் சுகாதார தூபம் பாவியுங்கள். அண்ணா கோப்பி கடைகளிலும் விற்பனையாகின்றது —மில்க்வைற் (சி-5393)

## கடிகாரமா? றேடியோவா?

உங்கள் கடிகாரங்கள், றேடியோக்களை உத்தரவாதத்துடன் திருத்திக் கொள்ள எம்மை நாடுங்கள். (சகல கடிகார பற்றறிகளும் எம்மிடம் உண்டு.) தரமான கடிகாரங்கள், றேடியோக்கள் நியாய விலைக்கு விற்றுக் தரப்படும். டில்கா வாச் வேக்ஸ், 284 ஸ்ரான்லி வீதி, (வானவில் கூல்பார் அருகாமையில்) யாழ்ப்பாணம். கிளை: பஸ் நிலையம், சாவகச்சேரி. (சி 5399)

## எம் ஜி. ஆர். திருமணசேவை

வெளி நாடுகளில் தொழில் புரியும் செவ்வாய்க் குற்றம் உள்ள, குற்றம் அற்ற ஆண்களுக்கு பொருத்தமான மணமகள்கள் தேவை. இலங்கையில் வந்து விவாகம் செய்யலாம். தொடர்பு: எம். ஜி. ஆர். திருமண சேவை வே புண்ணியமூர்த்தி, புத்தூர்ச் சந்தி, மீசாலை. (3358)

# அறிவித்தல்

விடுதலைப்புலிகளின் நிதிப் பிரிவு மேற்கொள்ளும் தொழில்கள் பதிவு செய்தல் நடவடிக்கைகளில் தனியார் கல்வி நிறுவனங்களும் அடங்கும். எனவே சகல தனியார் கல்வி நிறுவனங்களும் தவறாதுபதிவுசெய்து கொள்ளவும்.

பொதுச்செயலாளர்
**தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்**
யாழ். மாவட்டம் (3626)

# வேலை வாய்ப்பு

## பயிலுனர் விற்பனைப் பிரதிநிதி

மேற்படி பதவிக்கான விண்ணப்பதாரி சுயமாக சிந்தித்துச் செயற்படக் கூடியவராகவும், சந்தைப்படுத்தலைத் தொழிலாக்கிக் கொள்ள விரும்புபவராகவும் இருத்தல் வேண்டும்.

பயிற்சிக் காலத்தின் போது அலவன்ஸ் வழங்கப்படும் பயிற்சியின் பின்னர் தகுதியானவராகக் காணப்படும் பட்சத்தில் விற்பனைப் பிரதிநிதியாக நியமிக்கப்படுவார்.

தகுதிகள்:

# ஊர்வலம் கலைப்பு

சுதந்திர வர்த்தக வலயப் பகுதியில் இருக்கும் தொழிற்சாலைகளிலிருந்து வேலை நீக்கம் செய்யப்பட்டவர்களை மீண்டும் வேலைக்கு சேர்க்கக் கோரியும், மற்றும் சில உரிமைகள் கோரியும் கடந்த சனியன்று ''பிக்கெட்டிங்'' போராட்டத்தில் ஈடுபட்ட தொழிலாளர்கள் பின்னர் ஊர்வலமாக செல்ல முயன்றபோது பொலிசார் தடியடிப் பிரயோகம் செய்து கலைத்தனர்.

பாராளுமன்ற உறுப்பினரான வாசுதேவ நாணயக்கார தலைமையில் நடைபெற்ற மேற்படி ஊர்வலத்தைக் கலைக்க பொலிசார்கண்ணீர்ப் புகைக் குண்டுகளையும் பயன்படுத்தியுள்ளனர்.

மேலும் இச் சம்பவம் தொடர்பாக 'நீர்கொழும்பு மாநகரசபை உறுப்பினர் டிட்டோ பெர்னாண்டோ மற்றுமொரு பெண்மணி ஆகியோர் பொலிசாரால் கைது செய்யப்பட்டிருப்பதுடன் பலர் காயமடைந்திருப்பதாகவும் தெரியவருகிறது.

# இளம்பெண் தற்கொலை

[வடமராட்சி]
பருத்தித்துறை பிரதான

யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்
சுகாதாரத் தொழிலாளர் [அமைய]

# பதவி வெற்றிடங்கள்

யாழ்ப்பாண மாநகரசபை அமைய அடிப்படையில் சுகாதாரத் தொழிலாளர் பதவி வெற்றிடங்களை நிரப்பத் தீர்மானித்துள்ளது.

**தகைமைகள்**

01. கல்வி: 5ஆம் வகுப்பில் சித்தி
02. வயது: 18 வயது தொடக்கம் 40 வயது வரை
03. யாழ்ப்பாண மாநகர எல்லைக்குள் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

விண்ணப்பதாரிகள் மேற்படி தகைமைகளை நிரூபிக்கும் சான்றிதழ்களுடன் 16-11-1992 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 09-00 மணிக்கு யாழ். கண்டி வீதியில் அமைந்துள்ள யாழ்ப்பாண மாநகர சபையின் சுகாதார வைத்திய அதிகாரியின் அலுவலகத்திற்குச் சமுகமளிக்குமபடி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

மாநகர அலுவலகம், யாழ்ப்பாணம்.
11-11-1992.
மாநகர ஆணையாளர், யாழ்ப்பாணம்.
(சி/5396)

# 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்: திருமதி

யாழ்ப்பாண மாநகரசபை

# அறிவித்தல்

யாழ். மாநகரசபை எல்லைக்குள் இயங்கும் இறைச்சி வியாபாரிகள் அனைவருக்குமுரிய முக்கியமான கலந்துரையாடல் ஒன்று இன்று 13-11-92ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10. 00 மணிக்கு மாநகரசபை கணக்காளர் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

அனைவரையும் தவறாது கலந்துகொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

மாநகர அலுவலகம், யாழ்ப்பாணம்.
12-11-1992.
மாநகர ஆணையாளர், யாழ்ப்பாணம்.
(சி-5402)

# 2-ம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
12 — 01 — 1970



மறைவு
04 — 11 — 1990

செல்வி புண்ணியகாந்தன்
**கணேஸ் பவானி**
திதி: 13-11-1992

மலர் ஒன்று மலர்ந்து நறுமணம் வீசுவது போல் உன் நினைவு மலரும். எங்கள் அனைவரது மனதிலும் நீங்காத மணம் வீசுகின்ற மகளே! வீட்டுக்கு மூத்தவளாய், குலவிளக்காய் பிறந்த எம்மினிய மகளே இருபது ஆண்டுகள் உயிர்த்துடிப்புள்ள மலரும் உன் முகம் கண்ட நாங்கள் இந்த ஓராண்டு துடிப்பற்ற உன் நிழற்படம் கண்டு தவியாய் தவிக்கிறோம்.

உன் நினைவால்
அன்புள்ள அப்பா, அம்மா, சகோதரர்கள்
மண்டைதீவு தெற்கு,
8-ம் வட்டாரம் (3575)

# நினைவு கூருகின்றோம் ...
## 1992-11-13

1985-ம் ஆண்டு இதேதினத்தில் இறால்குழிப்பகுதியில், சிறிலங்காப்படையினரின் சுற்றிவளைப்பின்போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய-

கேதீஸ் (சண்முகம் ஜெகதீஸ்வரன் 2-ம் கொலனி, கந்தளாய் -- திருக்கோணமலை)

1987-ம் ஆண்டு இந்தியப்படையினர் மேற்கொண்ட கண்மூடித்தனமான எறிகணைத்தாக்குதல்களின் போது

தகுதிகள்:

★ 25 வயதுக்கு உட்பட்டவராகவும்

★ க. பொ. த (உ / த) உடன்
குறிப்பிடத்தக்க ஆங்கில அறிவு உடையவரா
கவும் இருத்தல்வேண்டும்.

சுய விபரங்களுடன். சிபாரிசு செய்யக்கூடிய இரு
வரது விபரங்களுடன் 20-11-1992-க்கு முன்னர் கிடைக்
கக் கூடியதாக விண்ணப்பிக்கவும்.

**Taste Line Industries [PVT] LTD.**
14, SEENIER LANE, JAFFNA.

(சி-5386)

[வடமராட்சி]
பருத்தித்துறை பிரதான வீதியில் இளம் பெண் ஒருவர் கழுத்தில் சுருக்கிட்டு தற்கொலை செய்து கொண்டார்.

திருக்கோணமலையைச் சேர்ந்த நீக்கிலாஸ் - ரோஸ்மேரி (வயது 35) என்ற இளம்பெண் பருத்தித்துறை துறைமுகப் பகுதியில் உள்ள வீடொன்றில் கழுத்தில் சுருக்கிட்ட நிலையில் தற்கொலை செய்து கொண்டவராவர். (யோ)

அமரர்: திருமதி
## நாகேஸ்வரி விஜயசிங்கம்

தோற்றம்: 15-06-1940 | மறைவு: 15-11-1989

திதி: 13-11-1992

ஆண்டு மூன்றாக அணி பணிகள் செய்கின்றோம்
வேண்டும் பணிதன்னை மேற்கொண்டோம்-தூண்டும்
தாயில்லாப் பிள்ளைகளாய்த் தவியாய்த் தவிக்கின்றோம்
வாயில்லாப் பூச்சிகளாய் நாம்.

உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்
கணவன், மக்கள், மருமக்கள் குடும்பத்தினர்.

166/3 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம். (3631)

எம் அன்பு நெஞ்சங்களே......

உங்கள் உறவினர்கள், விருந்தினர்கள் எவராவது திடீர் வருகை தந்தால்...
உபசரிக்க உங்கள் உள்ளத்தில் பதற்றம். திடீர் உணவுத் தேவைக்கு என்ன செய்யலாம்
கவலையை விடுங்கள்... இருக்கவே இருக்கிறார்கள்

# திருமால் பேக் கவுஸ்

ஸ்தாபனத்தார்கள்

சுடச்சுட தரமான சுவையான முறையில் தயாரிக்கப்பட்ட

**கேக்வகைகள்** **பாண்**
**பணிஸ்வகைகள்** **பட்டர் பாண்**

இதுமட்டுமா உங்கள் பிறந்த நாள் விழா, மங்கள வைபவங்களுக்கு
ஓடருக்கு கேக் பல பல டிஷைன்களில்

அனைத்துக்கும் ஒருமுறை விஜயம் செய்யுங்கள்

விபரங்கட்கு-:

# திருமால் பேக் கவுஸ்

**நவிண்டில் - நெல்லியடி**

[சி-5392]

**கேதீஸ்** (சண்முகம் ஜெகதீஸ்வரன் 2-ம் கொலனி, கந்தளாய் -- திருக்கோணமலை)

1987-ம் ஆண்டு இந்தியப்படையினர் மேற்கொண்ட கண்மூடித்தனமான எறிகணைத்தாக்குதல்களின் போது கோண்டாவில் நெட்டிலிப்பாய்ப் பகுதியில் கொல்லப்பட்ட 2-பெண்கள்.

1988-ம் ஆண்டு தம்பலகமம்பகுதியில் இந்தியப் படையினரின் சுற்றி வளைப்பின் போது வீரச்சாவெய்திய-

**2 ம் லெப்.ஜெயசீலன்** (காளியப்பு நாத கணேச லிங்கம்-தம்பலகமம்-திருக்கோணமலை)

யாழ்ப்பாணத்தில், தேசவிரோதிகளால் படுகொலை செய்யப்பட்ட-

நாட்டுப்பற்றாளரான-

★ **சுந்தரம் வைகுந்தவாசன்** (வளாகவீதி, திருநெல்வேலி-யாழ்)

அரியாலையில். இந்தியப்படையினரால் கைதுசெய்யப்பட்டுக் கொண்டு செல்லப்பட்ட பின்னர் மாம்பழம் சந்தியில் சடலமாக மீட்கப்பட்ட யாழ்-தொழில் நுட்பக்கல்லூரி மாணவன்.

வல்வெட்டித்துறை - ஊரிக்காடுப்பகுதியில் இந்தியப் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட தமிழ்ப்பொதுமகன்

1990-ம் ஆண்டு மட்டக்களப்பில் ஷெல்வீச்சில் பலியான வந்தாறுமூலை வாசியான தமிழர்.

1991 ஆம் ஆண்டு தீவகத்தில் இடம் பெற்ற இராணுவ நடவடிக்கைகளில் அகப்பட்டு, பின் அங்கிருந்து தப்பி வரும்போது வீரச்சாவெய்திய

**செங்கதிர்** (கந்தையா துரைரத்தினம்)

வவுனியா - செட்டிகுளம், உக்கிளாங்குளம் பகுதியில் சிறிலங்கா இராணுவமுகாம் காவலரண்கள் தகர்ப்பின் போது வீரச்சாவெய்திய

**பௌனாகரன் | நவராசன்** (சுப்பிரமணியம் விஜயகுமார் - கல்மடு, வவுனியா)

**அலெக்சான்டர் பாவேந்தன்** (கதிரவேலு கணேஷ்கன்னா - பன்றிக்கெய்தகுளம் - வவுனியா)

**2 ஆம் லெப். மைக்கல் / தமிழ்வேந்தன்** (பூலோகம் குமார் - வண்ணாங்குளம், முல்லைத்தீவு)

**மகேந்திரன்** [சந்தானம் ரவிச்சந்திரன்-நெடுங்கேணி மணலாறு]

**குஞ்சன்** [சுப்பிரமணியம் கருணாகரன் - வற்றாப்பளை, முள்ளியவளை - முல்லைத்தீவு]

**இசைவாணன் / நீல்டன்** [சுப்பிரமணியம்-ஜெயமோகன் - 10 ஆம் வாய்க்கால் - கிளிநொச்சி]

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

★ மேற்குறிப்பிடப்பட்டுள்ள மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கியகாலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவார்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி-5398)




சென்ற ஆண்டு மணலாற்றில் நடந்த வரலாற்றுப் போரில் வீரச்சாவடைந்த இருநூறுக்கும் அதிகமான வேங்கைகளில் ஒருவன்தான் வீரவேங்கை கல்கத். இவனை கல்கத் என்று கூறுவதைவிட கிரிசாந்த் என்றே அநேகமான போராளிகள் அழைப்பர். ஏனெனில் கிரிசாந்த் என்ற பெயரில்தான் இவன் முதன் முதல் இயக்கத்தில் அறிமுகமானவன்.

கிரிசாந்த் 1990ஆம் ஆண்டு தைமாதம் எமது இயக்கத்துடன் தன்னை முற்றாக இணைத்துக் கொண்டான். யாழ். புத்தூர் கிழக்கு விசுகிலேஸ்வரா வீதியைச் சேர்ந்த மார்க்கண்டு - ரவீந்திராதேவி தம்பதிகளின் மூத்த புதல்வன். இவனது இயறபெயர் மதனரூபன். பழம் என்றுதான் வீட்டில் அழைப்பார்கள். இவனுக்கு இரண்டு தங்கைகளும் ஒரு தபபியும் உண்டு. கிரிசாந்த் யாழ். மத்திய கல்லூரி மாணவன். ஆனாலும் பள்ளிப் பிராயத்திலே பள்ளிப் படிப்பைப் பாதியிலே நிறுத்திவிட்டு காலத்தின் தேவை கருதி களத்திற்கு வந்தவன். வீட்டிலே தலைமகன் தாய் தந்தையரின் மிகுந்த கட்டுப்பாட்டின் கீழ் வளர்ந்தவன். வெளி உலகத்தை நன்கு அறியாதவன். வயதில் சிறியவன். ஆனாலும் குறும்புத்தனம் இவனிடம் மிகுதியாகக் காணப்பட்டது. இயக்கத்திற்கு வருவதற்கு சில நாட்கள் முன்புகூட இவனது குறும்புத்தனத்தால் தன் தம்பியின் கை உடைந்தது. ஆனால் இச்சம்பவமே கிரிசாந்தின் குறும்புத்தனத்தைக் கட்டுப்படுத்த வழிகோலியது. ஆனாலும் இறுதிவரை மூற்றாகக்குறையவில்லை.

கிரிசாந்த் வயதில் சிறியவன்தான். ஆனால் போராட்டத்தில் இவனது பங்களிப்பு பெரியது. சண்டையின்போது மருத்துவம் என்பது அத்தியாவசியமானதும் மிகமுக்கியமானதுமாகும். இந்த மருத்துவ சேவையைத்தான் கிரிசாந்த் செய்தான். மருத்துவ பணியுடன் மட்டும் இவனது பங்களிப்பு நிற்கவில்லை. சிறிலங்கா இராணுவத்திற்கெதிரான சிலதாக்குதல் சம்பவங்களிலும் பங்கு கொண்டவன். முக்கியமாக ஆனையிறவு வரலாற்றுப் போரிலும் இவனது கைகள் துப்பாக்கி ஏந்தியது குறிப்பிடத்தக்கது. இவற்றுடன் கலையுணர்வு இவனிடம் இயல்பாகவே காணப்பட்டது. இவன் சங்கீதம் கற்கவில்லைதான். ஆனாலும் இவனது குரல் இனிமையானது, சில வேளைகளில் நண்பர்களின் வேண்டு கோளுக்கிணங்கி சில பாடல்களைப்பாடுவான். அப்போது நாங்களே எங்களை மெய்மறப்பதுண்டு. அது மட்டுமல்ல சித்திரங்கள் வரைவதிலும் கெட்டிக்காரன். கானகத்திலே மாவீரர் சிலரின் சமாதிக்கு மாபிள்களைக் கொண்டு பெயர் வரைந்துள்ளான். அதன் நுணுக்கத்தையும் அழகையும் பார்த்தால் இவனது கலைத்திறன் நன்கு புலப்படும். ஒரு உருவத்தைப் பார்த்தால் அதை அப்படியே கீறிவிடுவான். இவன் ஒரு போதும் சும்மா இருப்பதில்லை. வேலை இல்லாத வேளைகளில் ஏதாவது வரைந்துசொண்டுதான் இருப்பான். இயற்கைக் காட்சிகள் இவன் மனதைக் கொள்ளை கொண்டு விடுகின்றன போலும் அனேகமாக இவன் வரையும் படங்கள் எல்லாம் இயற்கைக்காட்சிகள் தான். தன் பெயரை எழுதினால்கூட அதற்கு பூக்களின் படங்களை வரைந்து அலங்கரிப்பான். இவற்றுடன் கைப்பணிப் பொருள்கள் கூட நன்றாகச் செய்வான்.

நாம் பாவனை செய்து கழித்துவிடும் சேலைன் ரியூப், சேலைன் வயர் போன்றவற்றை எடுத்து சேர்த்து மீன், பூ, பறவை போன்ற பொருள்களை மிகவும் அழகாகவும் நுட்பமாகவும் செய்து முடிப்பான். ஆனால் இவனிடம் ஒரு பழக்கம் எவராக இருந்தாலும் சரி தவறுகள் விட்டால் வெளிப்படையாகவே நேருக்கு நேர் கூறியோ கேட்டோ விடுவான். எதையும் மனதில் வைத்திருக்கும் பழக்கம் இவனிடம் கிடையாது. இதனால் சிலபேரின் கோபத்துக்கூட ஆளானான். என்ன தான் இருந்தாலும் இரக்க சுபாவம் இவனிடம் மிகுதியாகவே காணப்பட்டது. அத்துடன் இலட்சியத்திலும் உறுதியாகவே இருந்தான்.

கிரிசாந்திடம் இயக்கத்திற்கு வந்த பிறகும் குறும்புத்தனம் ஓரளவு இருக்கத்தான் செய்தது. ஆனால் எமது இயக்கத்தின் கட்டுப்பாடுகளுக்கு மிகவும் கட்டுப்பட்டவன். ஒரு முறை 1990ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் நண்பன் ஒருவனின் சவாலுக்காக தனது புதிய பல்தீட்டும் பிரசை சேற்றில் வீசிவிட்டான். இதற்குத் தண்டனையாக எறிந்த பிரசை நூலில் கோர்த்து கழுத்தில் போட்டுக் கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டது. பின்பு 1991-ம் ஆண்டு தைப்பொங்கல் அன்றுதான் அந்த பிறஸ் அவனின் கழுத்தால் கழற்றப்பட்டது. இலட்சிய உறுதி கொண்ட கிரிசாந்த் பயிற்சி முடித்து சில மாதங்களின் பின் மணலாறு மாவட்டத்தில் விடுதலைப்புலிகளின் மருத்துவப் பிரிவில் மருத்துவக் கல்வியைப் பயின்றான். பின்பு சில முகாம்களிலும் சில சண்டைகளிலும் மருத்துவராகக் கடமை புரிந்தான். ஆ. க. வெ. தாக்குதலுக்கும் தாக்குதல் பிரிவில் ஒருவனாகச் சென்றான். பின்னர் மீண்டும் மணலாறு வந்து மருத்துவப் பணியைத் தொடர்ந்தான்.

கிரிசாந்த் 1990-ம் ஆண்டு தைமாதம் எமது இயக்கத்திற்குச் சேர்ந்த காலத்தில் இருந்து இறுதிக் காலம் வரையிலான காலப்பகுதியில்மூன்று மணித்தியாலங்களை மட்டும் யாழ்நகரில் கழித்திருக்கின்றான். அதுவும் காயமுற்ற போராளி ஒருவனை யாழ். வைத்தியசாலைக்கு கொண்டு வந்த போது தான் அவனது போராட்ட வாழ்க்கையில் மிகுதிக்காலம் முழுவதும் மணலாற்றுக்கானகத்திலேயே கழிந்தது. ஆனால் அவனுக்கு இறுதிவரை ஒரு ஆசை இருந்தது தான் பிறந்து வளர்ந்த மண்ணையும் தன் உறவினர்களையும் ஒரு முறையாவது பார்க்க வேண்டும் என்றுதான்.. இதை வெளிப்படுத்த "யாழ்ப்பாணம் என்றுசொன்னால் தேன் சுவையூறும்" என்று பாட்டாகப்படிப்பான். ஆனால் கிரிசாந்த் கொண்ட இலட்சியம் குன்றிடாதவன். தமிழீழம் வென்றெடுக்கப்பட வேண்டும் என்பதில் ஆர்வத்துடன் தீவிரமாகச் செயற்பட்டவன். கிரிசாந்த் இறுதிக் கட்டத்தில் களத்தில் நிற்கும் வேளையில்தான் அவன்தனது உறவினர்கள் சிலரைக் கண்டான். அவ்வுறவினர்கள். எமது அமைபபின் சாள்ஸ் அன்ரனி விசேட படையணியைச் சேர்ந்தவர்கள். அவர்கள் மூலம் வீட்டில் இருந்து ஒரு கடிதம் கூட அவனுக்குக் கிடைத்தது. அதில் "உனது இலட்சியப்பாதைக்கு நாம் எவ்வகையிலும் தடையாக இருக்கமாட்டோம். ஆனால் தயவு செய்து ஒருமுறையாவது எம்மை வந்து பார்த்து விட்டுச் செல் எம்மை விட்டு நீ பிரிந்து இரண்டு வருடங்களாகின்றது. உன்னை பார்க்க எமக்கு மிகுந்த ஆவலாகவும் ஆசையாகவும் உள்ளது" என்று இக்கருத்தை முதன்மையாகக் கொண்டு அவனது தாயாரால் அக்கடிதம் வரையப்பட்டு இருந்தது. ஆனாலும் களத்தில் நின்ற கல்கத்தின் மனம் தளரவில்லை. இலட்சியப் பற்றில் மேலும் வலுப்பெற்றான். உடனே அக்கடிதம் கொடுத்த உறவினரான போராளியிடம் கூறினான். 'அம்மாவைக்காணும் வாய்ப்பு உங்களுக்குக் கிடைத்தால் சொல்லுங்கோ, மணலாற்றில் ஒரு வரலாற்றுப் போர் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இப்போரிலே நானும் களத்தில் நிற்கின்றேன். போர் முடிந்தபின் நான் உயிருடன் இருந்தால் நிச்சயம் உங்களை வந்து பார்ப்பேன் என்று சொல்லுங்கோ' என்று தீரத்துடன் சொன்னான். அந்த இளம் வீரவேங்கை கிரிசாந்த் என அழைக்கப்படும் கல்கத் இச்சம்பவம் களத்திலே போர் விமானங்களின் அகோரக் குண்டு வீச்சுக்களும் பாரிய ஷெல் தாக்குதல்களுக்கும் எதிரியிடம் இருந்து பாய்ந்துவரும் துப்பாக்கி ரவைகளுக்கும் மத்தியில்தான் நடைபெற்றது.


வீரவேங்கை
**கல்கத்/**
**கிரிசாந்த்**

கிரிசாந்த் இலட்சியத்தில் உறுதியாக தொடர்ந்தும் தன் பணியைச் செய்கின்றான் போர் முனையில் படுகாயமுற்றுக்கிடந்த போராளிகளை எடுத்து வந்து மருத்துவ சிகிச்சை செய்து எத்தனையோ போராளிகளின் உயிரைக் காப்பாற்றினான்.

போர்முனையிலே காயமுற்றுக் கிடந்த தன்னையும்விட வயதாலும் உருவத்தாலும் கூடிய போராளிகளைக் கூட தனது சிறிய தோளில் தனித்துத் தூக்கிவந்து மருத்துவ முதலுதவி புரிந்தான். போர் முனையில் காயமுற்றுக் கிடக்கும் போராளிகளைத்தூக்கும் போது அவர்களின் ஆயுதங்களை விடமாட்டான். அவ்வாயுதங்களை எடுத்து இயக்கி சில கணப்பொழுது எதிரியை அதிரவைத்து விட்டுத்தான் வருவான். இவ்வாறுகளத்திலே வேகத்துடனும் தீரத்துடனும் செயற்பட்டுக் கொண்டிருந்த கிரிசாந்த் போர் முனையிலே காயமுற்றுக் கிடந்த போராளி ஒருவனை தூக்கி வந்து மருத்துவ முதலுதவி செய்து கொண்டிருந்த போதுதான் எதிரியின் எறிகணை ஒன்று கிரிசாந்த்தின் அழகிய முகத்தைப்பதம் பார்த்தது.

அப்போது அந்த வீரவேங்கை மடிந்து வீழ்ந்தான். அவனைக் கையிலே தூக்கியெடுத்தபோது அவன் எழும்பவில்லை. குருதிதான் அவனது பச்சை உடைகளை சிவப்பு நிறமாக்கியது. அவனுக்கு மருத்துவ சிகிச்சை செய்யத் துடித்த நாம் ஏமாந்து விட்டோம். அவன் வீரச்சாவு அடைந்துவிட்டான். கிரிசாந்த் துயில் கொண்டியிருந்தான் மாவீரனாக.

- கவாஸ்கர்

---

# தினந்தோறும் வளிமண்டலத்தினுள் 3000 தொன் எரிகற்கள் வருகின்றன

தொலைநோக்கி மூலம் சந்திரனைப்பார்த்தால் சிறியவையிலிருந்து 150 மைல் அகலம் வரையுள்ள பல பள்ளங்களைப் பார்க்கலாம். வீசும் காற்று, நீர், பரவிவரும் தாவர வளர்ச்சி இவைமட்டும் பூமியின்மேல் இல்லாதிருந்தால் பூமியின் மேற்பரப்பு முழுவதும் அவ்வாறே தோற்றமளிக்கும். இவை விண்கற்களால் உருவாக்கப்பட்டவை ஆகும்.

வீழ்நட்சத்திரங்கள் யாவும் உண்மையில் நட்சத்திரங்கள் அல்ல என்பதனை பண்டைய கிரேக்க விஞ்ஞானிகள் அறிந்திருந்தனர். ஏனெனில் நாளாந்தம் பெருமளவில் "நட்சத்திரங்கள்வீழ்ந்தபோதும்" வானத்திலுள்ள நட்சத்திரங்களின் எண்ணிக்கை சிறிதும் மாறுபடாது இருந்தது.

வீழ்நட்சத்திரம் தோன்றுவது ஒரு தற்காலிக நிகழ்ச்சியாக இருந்தமையால் அதுகட்டாயமாக காற்று மண்டலத்தினுள்தான் நிகழ வேண்டும் என கிரேக்க விஞ்ஞானி அரிஸ்டோட்டில்முடிவுகட்டினார். எனவே இவற்றிற்கு "எரிகற்கள்" என பெயரிட்டார். விழுவனவற்றில்எவைபூமியின்மேற்பாகத்தை அடைகின்றனவோ அவற்றிற்கு "விண்கற்கள்" எனபெயரிட்டார்.

அண்டவெளியில் சிறிதும் பெரிதுமாக பல விண்கற்கள் சுற்றி வருவதாகவும் அவை பூமியின் பாதையை வெட்டும் போது பூமியின் கவர்ச்சிவிசைக்கு உள்ளாகி பூமியை நோக்கி வரும்போது காற்றின் உராய்வினால் எரிகின்றன என்றும் இவற்றில் சில பூமியின் மேற்பரப்பை அடையும்முன் முற்றாக எரிந்து விடுகின்றன என்றும் சில பூமியை வந்தடைகின்றன என்றும் கருதப்படுகிறது.

ஆதிகாலத்திலேயே மக்கள், சில விண்கற்கள் பூமியில் விழுந்ததைக் கண்டிருக்கின்றனர். அப்படி விழுந்தவை யாவும் இரும்புக்கட்டிகள் எனவும்கண்டனர். பெற்றலக்ஸ் என்ற விளையாட்டுவீரன் போட்டிகளில் வெற்றி பெற்றமைக்காக இரும்புக்கல்லொன்று பரிசாக வழங்கப்பட்டிருக்கிறது. இது கட்டாயமாக விண் கல்லாகத்தான் இருந்திருக்க வேண்டும். ஏனெனில் அப்பொழுது இரும்புகண்டுபிடிக்கப்படவில்லை.

மூட நம்பிக்கைகள் அகன்று கொண்டிருந்த பதினெட்டாம் நூற்றாண்டில் கூட விண்கற்கள் உள்ளன என்பதை நம்ப விஞ்ஞானிகள் தயாராகவில்லை. விழுந்த விண்கற்களை எடுத்து வந்தவர்கள் கேலி செய்யப்பட்டார்கள். எனினும் 1883-ம்

**-வேலவன்**

ஆண்டு அமெரிக்காவில் பெய்த "விண்கல் மழை"யை அடுத்தே இது குறித்து ஆராய விஞ்ஞானிகள் முன்வந்தனர்.

வாணவேடிக்கை போல் பெருமளவு விண்கற்கள் எரிந்தவாறு வான்வெளியில் பிரவேசித்தபோது ஏற்பட்ட கண்கொள்ளாக் காட்சியே இவை பற்றி ஆராய விஞ்ஞானிகளைத் தூண்டியது.

பூமியின் மேல் வீழ்ந்த விண்கற்களில் பெரும்பாலானவை இரும்பாலானவையாகக் காணப்பட்டன. ஆகவே இரும்பாலான விண்கற்கள்தான் மற்றவைகளை விட அதிகமாக இருக்க வேண்டும் என எண்ணப்பட்டது. ஆனால் இது தவறு என்பது பின்னர் தெரிய வந்தது.

ஏனெனில் கற்பாங்கான இடத்தில் விழுந்த இரும்பால் ஆன விண்கல்லை இலகுவில் கண்டுபிடித்து விடலாம். ஆனால் கல்லால் ஆன விண்கற்கள் கற்பாங்கான இடத்தில் விழுந்தால் அவற்றைக் கண்டுபிடிப்பது கடினம்.

[5ஆம் பக்கம் பார்க்க]

# ‘சிரித்திரனுடன் ஒரு சந்திப்பு’



கார்ட்டூன் மக்களின் நடத்தை முறைகளின் மீதும் வாழ்க்கையின் மீதும் செல்வாக்குச் செலுத்துகின்ற ஒரு கலை வடிவமாகியுள்ளது. கார்ட்டூன்கள் அர்த்தங்கள் சார்ந்தும், அழகு சார்ந்தும் சமூகமாற்றத்திற்குத் துணை புரியும் இரியா ஊக்கிகளாகவும் உள்ளன. இந்த வகையில் சிரித்திரன் ஆசிரியர் எஸ் சிவஞானசுந்தரம் கார்ட்டூன் என்ற கலை வடிவத்துக்குள்ளேயே எண்ணற்ற பரிசோதனைகளைச் செய்தவர். தனக்கே உரித்தான புதிய பரிமாணங்களை உருவாக்கியவர். இவருக்கென்றே ஒரு முத்திரையை ஏற்படுத்திய சித்திரகானம், சவாரித்தம்பர் ஆகிய கார்ட்டூன் தொடர்களில் மனிதனின் பாசாங்குகள் பற்றிய கிண்டலான கருத்துகள் காணப்படுகின்றன. ஒரு ஜனரஞ்சகமான கலையம்சம் இவருடைய கார்ட்டூன்களில் விரவிக் காணப்படுகின்றன. பெரும்பாலும் இவருடைய கார்ட்டூன்கள் யாழ்ப்பாணச் சமூகத்தினரின் வாழ்க்கையைச் சித்திரிக்கின்றன.

(சந்திப்பு - மதன்)

கல்லூரிக் காலத்திலேயே சித்திரம் வரைவதில் எனக்கு மிகுந்த நாட்டமுண்டு. நான் சென். பற்றிக்ஸ் கல்லூரியில் இந்துவிடுதி மாணவனாய் இருந்தபோது அந்த விடுதி ஒழுங்குகளுக்கு ஏற்ப விளையாட்டில் பங்குகொள்வதில்லை ஓய்வுநேரங்களில் முழுமூச்சாய் படம் கீறுவேன். என் விஷயத்தில் ஆத்திரமடைந்த சாள்ஸ் சுவாமியார், ஒரு முறை என் வரைதல் கொப்பியை என்னிடமிருந்து பறித்துக் கொண்டார்,

பகிரங்க வேலைப் பகுதிப் பணிப்பாளர் திரு மகாதேவாவின் தூண்டுதலால் கட்டட நிர்மாணக் கலைபயில பம்பாய் நகரம் சென்றேன். சுதந்திரத்துக்கு முன்பு இந்து-முஸ்லிம் கலவர காலமது. இந்தச் சூழலில் கட்டட நிர்மாணக் கலையியல் படிக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் Sir J. J. School of Arts இல் சேர்ந்து படிததேன் ஆனால் எனது தனிததன்மை சித்திரம் வரைவது என்று குறுகியிருந்தது. பாடத்திட்டத்தை ஒட்டிக் கட்டட நிர்மாணக் கலையை என்னால் படிக்க முடியவில்லை. இரண்டு வருடங்களுக்கு மேல் என் படிப்பு நீடிக்கவில்லை. ஒரு விரக்தி நிலை ஏற்பட்டு அதைவிட மிகுந்த துன்பநிலையை அடைந்தேன். சும்மா இருப்பது சுகம் தரவில்லை. என் வாழ்க்கையில் ஒரு திருப்புமுனை ஏற்பட்டது. கார்ட்டூன் கீற வேண்டும் என்ற ஆர்வம் அப்போது தான் ஏற்பட்டது. கண்ணால் கண்டது பற்றி கற்பனை செய்ததைப் பற்றி கார்ட்டூன்ஓவியங்கள்வரைந்சேன்,

- இப்படிக் கூறுகிறார் சிரித்திரன் ஆசிரியர் எஸ். சிவஞானசுந்தரம்.

சிரித்திரனை அவர் இல்லத்தில் சந்தித்தபோது தனது சுகவீனத்தால் ஏற்பட்ட பலவீனத்தை நினைத்துக் கவலைப்படாமல் எளிமையான வார்த்தைகளில் நிரம்பிக் கிடக்கும் கலைத் தன்மையுடன் சகஜமாகப் பேசினார்.

★ **கார்ட்டூன் ஓவியங்கள் வரைவதில்பமபாய்நகரில் உங்களுக்கிருந்த சிறப்புச் சூழல்பற்றிக் கூறமுடியுமா?**

- கட்டடக் கலை கற்கை நெறியிலிருந்து இடையில் விலகியதும் கருத்தோவியத்தில் (கார்ட்டூன்] ஆழநுழைய வேண்டும் என்ற ஆர்வம் உண்டாகியது. எனக்கு ஒவியத்தில் காதல்- அது பைத்தியமாக மாறியது. இரவு பகலாக அறையில் இருந்து கீறிக் கொண்டே இருப்பேன். பம்பாயில் பல சிறு சஞ்சிகைகள் வெளிவந்தன எந்த ஒரு பத்திரிகையை எடுத்தாலும் புரட்டிய உடனே தென்படுவது கருத்தோவியம் தான். அக்காலத்தில் ஓவியம் வரைவதில் பல அனுபவங்கள் பெற்றேன் ஆனாலும் என்னை நான் அறிமுகப்படுத்திக்கொள்ளவில்லை. எனது நண்பர் ஒருவர் ‘‘பத்திரிகைகளில் காட்டிப் பார்க்கிறேன் பிடித்தால் பிரசுரிப்பார்கள்’’ என்று சில கருததோவியங்களை வாங்கிக் கொண்டார். இந்நிலையில் பிளிட்ஸ் இதழில் [BLITZ] எனது கருததோவியம் பிரசுரமாகியது. கொஞ் இதழிலும் (CONCH) எனது கருத்தோவியங்கள் இடம்பெற்றன நான்கு வருடங்கள் இந்தியாவில் இப்படிப்போயிற்று.

★ **சமகாலத்தின் சிறந்த கருத்தோவியர்களைக் குறிப்பிட முடியுமா?**

இந்த வகையில் ஆர். கே. லக்ஷ்மன், போல் தக்ரே, டேவிட் லோ, சங்கர், ஏபிரகாம், கொலற் ஆகியவர்களைக் குறிப்பிடலாம். உதாரணமாக, லக்ஷ்மனனின் ஓவியங்களில் உருவ அமைதி இருக்கும். போல் தக்ரேயினுடைய உருவங்கள் மிகச் சாதாரணமாயிருக்கும். டேவிட் லோவினுடைய உருவங்கள் கருவிலும் உருவிலும்சிறப்பாக இருக்கும்.

★ **கருத்தோவியங்களுக்கும், கேலிச் சித்திரங்களுக்கும் உள்ள வேறுபாடுகள் எவை?**

பொதுவாக எல்லாக் கார்ட்டூன்களையும் கேலிச் சித்திரங்கள் என்று சொல்லி விடுகிறார்கள். இரண்டும் வித்தியாசமானவை. கருத்தோவியங்கள் மிகவும் காத்திரமான தன்மை கொண்டவை. அரசியல் கருத்தோவியங்களில் கூர்மை நிரம்பிக் கிடக்கும்; கருத்தும் இருக்கும், கண்ணீரும் இருக்கும். கேலிச் சித்திரங்களில் பகிடி, நையாண்டி, சிலேடை, நகைச்சுவை ஆகியன விரவிக் காணப்படும். கருத்தோவியம் என்பது ஒரு கருத்தைச் சொல்வது அதில் ஜீவகாருண்யம் இருக்கும். எனது கருத்தோவியம் ஒன்றில், மறி ஆடு ஒன்று கடாவைப் பார்த்து ‘‘என் காதலுக்கு என்ன பதில்?’’ என்று கேட்கிறது ‘‘தீபாவளிக்குப் பின் இருந்தால் பார்ப்போம்’’ என்கிறது கடா. இந்தக் கருத்தோவியத்தில் நையாண்டி இல்லை. அவலச் சுவை இழையோடி நிற்கிறது.

★ **தினகரன், வீரகேசரி என்று சில பத்திரிகைகளில் உங்கள் கார்ட்டூன்கள் பிரசுரமாயிருப்பதைப்பற்றிச் சொல்ல முடியுமா?**

எனது படைப்புக்களை ஒரு தொகுப்பாக்கி கொழும்பில் கண்காட்சி வைக்க முயற்சிக்கையில் தற்செயலாக வெள்ளவத்தையில் என்னைச் சந்தித்த பேராசிரியர் கைலாசபதி (அப்போது தினகரன் ஆசிரியர்) ‘‘நித்தமும் கண்காட்சியை வைக்கலாமே’’ என்றார். இந்த நம்பிக்கையில் தான் சுந்தர் என்ற பெயரில் சவாரித் தம்பர் தொடரைத் தினசரனில் செய்தேன். Peoples Voice, Trine, சமசமாஜிஸ்ட் ஆகிய ஆங்கில இடதுசாரி இதழ்களில் ஓவியம் வரைந்து எனது கைகளை சிவப்பு மையில் நனைத்திருக்கிறேன். கொழும்புப் பத்திரிகைகளை நினைவுபடுத்துகிற மற்றொரு காரியம் வீரகேசரியில் நான் முன்பு செய்து வந்த சித்திரகானம் என்ற பகுதி கண்ணதாசன், பட்டுக்கோட்டை போன்றவர்களின் பாடல்கள் அர்த்தபுஷ்டியானவை. பாடல்களில் சில வரிகளை மிக்க கவனத்துடன் தெரிவுசெய்து படங்களுடன் விளக்கி வந்தேன். ‘‘என் வாழ்வில் புதுப் பாதை கண்டேன்’’ என்ற அடிக்கு பெண் ஒருவர் காரை வேலியைப் பிய்த்துக் கொண்டு ஓட்டுவதாகப் படம் போட்டிருந்தேன். பாடலின் அடிகளும் படமும் சேரும் போதுதான் கலைத்தன்மையும் வலிமையும் உள்ளதாய் மாறுகின்றது.

★ **நீங்கள் வரைந்த கார்ட்டூன்களில் தரமானது எது?**

தமிழ்ப் பெண்—புருஷன்—பிள்ளை காட்டு வழியால் பேகிறார்கள். சிங்கம் குறுக்கிடுகிறது. புருஷன் மரத்தில் ஏறி ஒழித்துக் கொள்கிறார், மனைவி சிங்கத்துடன் போராடி அதனை விரட்டிப் பிள்ளையைக் காப்பாற்றிக்கொள்கிறாள். பிள்ளைக்கு உடம்பில் சிறு சிராய்த்த காயங்கள். மரத்திலிருந்து பக்குவமாய் இறங்கிய அவர் ‘‘இப்படித்தானா பிள்ளையைக் காப்பாற்றுகிறது?’’ என்றார். இப்படியான சொல்லாடலும் வடிவமும் வரலாற்று நிர்ப்பந்த காலத்தில் அந்நியப் படுத்தப்பட்டுநிற்கும்மக்களை சாடுகிறது.

★ **கார்ட்டூன்களைத் தவிர தனியானவெளிப்பாடாக நீங்கள் ஓவியம் வரையாதது ஏன்?**

கலாயோகி ஆனந்தகுமாரசுவாமியின் உருவத்தைக் கரித்துண்டு ஓவியமாக (Charcoal Painting) வரைந்துள்ளேன். அது கொழும்பு கலா பவனத்தில் [Art Gallery] உள்ளது. கலாயோகியின் பென்சில் வரைபடம் சுன்னாகம் நூல்

(5ஆம் பக்கம் பார்க்க)




- நன்றி சிரித்திரன்

# சிறுகதை

# தடுப்பூசி

## ஏ. ஆர். வி.

குகதாசன்

நாய்களின் குணத்தைப் பற்றி எனக்கு அவ்வளவாகத் தெரியாது இதுவரை நான் நாய்களுடன் பெரிதாகப் பழகியதுமில்லை,என்பதால்அவற்றின் குணநல மாறுதல்களைப் பற்றி எனக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை.

நாய்களுடன் நான் எப்போதுமே மரியாதையுடனேயே நடந்து கொண்டிருக்கிறேன். சிறு வயதிலும் சரி, இப்போதும் சரி நான் நாயைக் கண்டவுடன் கல்லைத் தேடியது இல்லை நாயைக் கண்டால் அது தன் வழியில் போகும் வரை காத்திருந்து, நான் என் வழியில் போவேன், இதுதான் என் வழக்கம் சில வேளைகளில் நான் பேசாமல், போவதைக் கண்டு, அதுவாகவே வம்புக்கு இழுத்தாலும் நான் ஒதுங்கியே போய்விடுவேன். சும்மா இருப்பவனை, சுரண்டிப் பார்ப்பதில் மனிதரைப் போலவே சில நாய்களும் சந்தோஷமடைகின்றன போலும். துட்டரைக் கண்டால் தூர விலகுவது தானே புத்திசாலித்தனம். நானும் புத்திசாலித்தனமாகவே நடந்து கொள்வேன்.

நாய் நன்றியுள்ள மிருகம் என்று தொடங்கி, பத்து வசனங்கள் எழுதி, பெரிதாகக் கிட்டத்தட்ட நாய் மாதிரியே ஒரு படமும் வரைந்து, எல்லோருக்கும் விளங்குவதற்காகப் படத்திற்குக் கீழே பெரிய எழுத்தில் நாய் என்று எழுதியதெல்லாம் இன்னும் ஞாபகம் இருக்கிறது அந்த வயதில் ஏதோ நாய்க் குட்டிக்கு ஆசைப்பட்டு, அடம் பிடித்து, நாய்க்குட்டியை வீட்டுக்குக் கொண்டுவந்து பிறகு, கொழு கொழு என்றிருந்த அந்த நாய்க்குட்டிக்கு நான் வீட்டில் இருந்த நேரமெல்லாம் சாப்பாடு போட்டேன். குட்டி நாய் என்பதால் பால்மாதான் அதற்குச் சாப்பாடு. நாய்க்குட்டி வந்து ஒரு வாரத்திற்குள்ளே தன் வயிற்றைத் தொப்பையாக்கிக் கொண்டது அது. அந்த ஒரு வாரத்திற்குள்ளேயே, அந்தத் தொப்பை வயிற்றுடனேயே நாய்க்குட்டி சொல்லாமல் கொள்ளாமல் செத்துப் போனது அதற்குப் பிறகுஎங்கள் வீட்டில் நாய் வளர்ப்பிற்கான எந்த ஒரு முயற்சியும் எடுக்கப்படவில்லை. நாய்க்குட்டி செத்து ஒருவாரத்துக்கு பெரும் சோகத்தில் திரிந்ததும், பிறகு ஏதோ என்னைச் சாந்தப்படுத்த ஒரு பொம்மை நாய்க்குட்டி வாங்கித்தந்ததும் ஞாபகமாகவே இருக்கிறது. கொஞ்சநாட்களாகபொம்மை நாய்கசுட்டிக்கும் இரவில் மட்டும் பால்மா கரைத்து வைத்

பாடுபட்டேன் ஆனால் இரவில் வைத்துவிட்டு நான் தூங்கிய பிறகுதான் பொம்மை நாய்க்குட்டி பால் குடிக்குமாம் என்று பாட்டி கதை சொன்னாள் நானும் ஒத்துக்கொண்டு பொம்மை நாய்க்குட்டி வாங்கிய முதல்நாள் இரவு பாலைக் கரைத்து வைத்து விட்டு தூங்கிப் போனேன் உண்மையாகவே காலை எழுந்து பார்த்த போது பொம்மை நாய்க்குட்டி பாலைக் குடித்துவிட்டிருந்தது. வீட்டிலும் எல்லோருக்கும் அதிசயமாகிப் போய் விட்டது. அடுத்தடுத்த நாட்களில்தான்கரைதது வைக்கும் பால் மறையும் மர்மம் கண்டு பிடிக்கப்பட்டது. மர்மம் ஒன்றும் பெரிதாக இல்லை. பக்கத்து வீட்டு கறுப்புப் பூனை கண் மூடி சத்தமின்றியே பாலைக் குடித்துப் போனது.

அந்த நாய்க்குட்டியை கொண்டுவந்து ஒரு வாரத்திற்குள்ளேயே செத்துப்போனதாலும் அது குட்டியாக இருந்த படியாலும், மேலும் நான் அப்போது சிறுவனாக இருந்த படியாலும் நாய்களைப்பற்றி பூரணமாக அறிந்து கொள்வதற்கு ஏற்றவாறான சந்தர்ப்பங்கள் கிடைக்கவில்லை. ஒரே ஒரு முறை கிடைத்த அனுபவமும் நாய்கள் மீது எனக்கு நல்ல அபிப்பிராயத்தையே ஏற்படுத்தி விட்டது. நாய் நன்றியுள்ள மிருகம் என்பதற்கு மேலாக, — நாம் தவறுதலாக அதன் வாலையோ அல்லது காலையோ தெரியாமல் மிதித்துவிட்டால் தெரியாமல் தவறு செய்தவர்களை மன்னிக்கலாம் என்ற அடிப்படையில் கடிக்காமல் விட்டுவிடுவது—என்ற தீர்மானத்தை எடுக்க எவ்வளவு உயர்ந்த குணம் வேண்டும். இந்த மாதிரியான நல்லெண்ணத்தை மனிதர்களிடம் கூட போய்விட்டது. தெரியாமல் செய்த தவறுக்கும் மன்னிப்புக் கிடையாது என்று சொல்லும்படி, மனிதனை மாற்றியது எதுவாக இருக்கும்? அதையே சலுகையாகப் பயன்படுத்தி தெரிந்து செய்த தவறுக்கும். தெரியாமல் செய்த தாக மன்னிப்புக் கேட்க தொடங்கிய நாளிலிருந்து இந்த நல்லெண்ணம் மனிதனிடமிருந்து மறையத் தொடங்கி இருக்கலாம்.

நாய் பற்றிய எனது நல்லபிப்பிராயத்துக்கு எங்கள் வீட்டுக்கு முன் வீட்டு நாயே காரணமாக அமைந்தது நாய் பற்றி நான் கொண்டிருந்த நல் லபிப்பிராயத்தை நானே மாற்றுவதற்கும் அந்த நாயே காரணமாக அமைந்தது என்பது மிக மிக வருந்தத்தக்கதே. ஒரு சந்தர்ப்பத்திலோ, ஒரு அனுபவத்திலோ ஒருவரைப் பற்றி அல்லது ஒன்றைப் பற்றி முடிவான ஒரு அபிப்பிராயத்தை ஏற்படுத்திக் கொள்வது எவ்வளவு பிழை என்பதை அந்த நாய் எனக்கு உணர்த்தி விட்டது. இது நடந்து பல வருடங்களாகி விட்ட போதும் எனக்கு இன்னும் ஞாபகம் இருக்கிறது.ஒரு நாள் இரவு ஏதோ தேவைக்காக முன் வீட்டுக்கு செல்ல வேண்டிநேர்ந்தது. அப்போது தான்தெரியாமல் அந்த வீட்டு நாயின் வாலை மிதிக்கும் படியாகி விட்டது. எனக்கு நல்ல காலமாக இருந்த படியால் அது என்னைக் கடிக்கவில்லை. பெரிதாகக் குரைத்து என்னை ஒரு நிமிடம் பயமுறுத்திவிட்டு வாலை ஆட்டிக்கொண்டு நின்றது. எனக்கு அந்த நாயை அவ்வளவு பரிச்சயமில்லை. இருந்தும் அன்று இரவு ஏன் எனக்கு வாலை ஆட்டி தன் நன்றி உணர்வைக் காட்டியது என்று இன்னும் புரியவில்லை.

நான் முன் வீட்டுக்குப்போகும் போதெல்லாம் வாசலில் படுத்துக் கிடந்து கடைக்கண்ணால் பார்த்து சோம்பேறித்தனமாக இரண்டொரு முறை ஏனோ தானோ என்றுவாலை அசைக்கும். அப்போதெல்லாம் நான் மரியாதையாக விலகியே நிற்பதுண்டு தெரியாமல் செய்த தவறுக்காக மன்னிக்கலாம் என்று என்னைப் பாவம் பார்த்து, அந்த நாய் கடிக்காமல் விட்டது எனக்கு நாய்களைப்பற்றி நல்ல அபிப்பிராயத்தை ஏற்படுத்தி விட்டது அன்றிலிருந்து நான் நாய் என்று மற்றவர்களை கோபத்தில் ஏசுவதைக் கூட தவிர்த்து விட்டேன். நன்றிகெட்ட தெரியாமல் செய்த குற்றம் என்பதைத் தெரிந்தும் மன்னிக்கத் தெரியாத இந்த மனிதர்களை நாய் என்று திட்டுவது நன்றியுள்ள, தெரியாமல் நிகழ்ந்து போன ஒன்றை மன்னிதது விடக்கூடிய பெருந்தன்மையுள்ள நாயை இழிவுபடுத்தும் படியாக அமைந்து விடும் என்பதால் மனிதர்களை எச் சந்தர்ப்பத்திலும் நாய்க்கு ஒப்பிட முடியாது; சில வேளைகளில் சில நாய்களைமனிதருக்கு வேண்டுமானால் ஒப்பிடலாம் என நான்நினைத்துக்கொள்வதுண்டு.

நாய்கள் பற்றி நான் வைத்திருந்த அபிப்பிராயத்தைப் போன வாரத்துடன் மாற்றிக் கொண்டேன் அன்றுவியாழக் கிழமை. நகரில் கட்டாக்காலி நாய்கள் தீவிரமாகப் பிடிக்கப் படுவதை தற்செயலாகக் கண்டேன். கட்டாக்காலி நாய்களைப் பிடிப்பதற்கு என்று தயாரிக்கப்பட்ட கூண்டுடன் சேர்ந்ததள்ளுவண்டில், அதற்குள் ஐந்தாறு நாய்கள். பல நிறங்களில், பல வித தோற்றங்களில் ''சோமாலிய''க் குழந்தையின் நெஞ்சறை

தும்படியாக ஒரு நாய் இன்று நீ என்னைப் பிடிக்காவிட்டாலும், நாளை நானாகவே செத்துப் போய்விடுவேன் என்பது போல் நின்றது. கூண்டிற்குள் இருந்த எல்லா நாய்களுமே திகிலுடன் தான் நின்றன. ஒன்றுடன் ஒன்று கடிபடாமல் நின்றது எனக்கு அதிசயமாக இருந்தது. நாய்கள் பிடிக்கப்படுவதை வேடிக்கை பார்க்க நின்ற, பொழுது போகாத கூட்டத்துடன் நானும்நின்றேன். அங்கு பிடிக்கப்படும் நாய்கள் எவ்வாறு கொல்லப்படுகின்றன என்பது பற்றியஒரு விவாதத்திலிருந்து.

—கூண்டுக்குள் அடைத்தபடியே, கடலுக்குள் தள்ளுவதன் மூலம் சிலநிமிடங்களில் நாய்களைக் கொன்று விடுவார்கள் என்றும், அவை வலி உணராமலேயே செத்துப் போக இது தான் நல்ல முறை என்றும் ஒருவர் கூறினார்.—

—மற்றவர், நாய்களுக்கு உணவில் விசம் வைத்துக் கொல்லப்படும் என்றும், அது தான் வலிஉணர முன்பே உயிரைப் பறிப்பதற்கு சிறந்த முறை என்றும் சொன்னார்.-

நீண்ட நேர விவாதத்தின் பின்னர் கூட, இருவரும் நாய்களின் உயிர்களைப் பறிப்பதில் சுகமான, வலி உணராமல் உயிரைப் பறிப்பதற்கான இறுதி முடிவினைக் காண வில்லை, என்ற போதிலும், நாய் பிடிப்பவர்கள்நாய்களின் வாலை வெட்டி எடுத்து, அதைக் கணக்குக் காட்டியே தமக்கான கூலியைப் பெறுகின்றனர் என்பதில் இருவரும் கருத்தி சைவு கொண்டிருந்தனர். பிறகு, கட்டாக் காலி நாய்கள் பிடித்து அழிக்கப்பட வேண்டிய தன் அவசியத்தையும், நாயிடம் கடி வாங்கி ஏ. ஆர். வி ஊசி இல்லாதகாரணத்தால், அமரர்களாகிப் போனவர்கள் கடைசி நேரத்தில் எப்படிச் செத்துப் போனார்கள் என்பது பற்றியும் கதைத்துக் கொண்டார்கள். எப்படிச்சாவு வந்தாலும் வரலாம்,- ஆனால் இப்படி மட்டும் சாவு வரக் கூடாது என்று சொல்லிக் கொண்டார்கள்.

எப்படி இருந்தாலும், பிடிக்கப்பட்ட நாய்கள் கொல்லப் படப் போகின்றன என்பதில் மாற்றமில்லை. அந்த நாய்கள் செத்தே தீரப்போகின்றன. இதில், அவற்றை வலி இல்லாமல் கொல்வதற்கு எது நல்ல முறை என்பது பற்றிஏன் கவலைப்படவேண்டும்.இறந்த பின்னால், இறக்கும் முன்னர் ஏற்பட்ட வலி பற்றியோ, எப்படி இறந்தோம் என்புது பற்றியோ நினைவில் இருக்காது என்றே நினைக்கின்றேன். கட்டாக்காலி நாய்க

லும். இந்த நாய்களை அநியாயமாகக் கொல்வது பாவம் என்றே நான் அப்போதுவரை நினைத்துக் கொண்டிருந்தேன்.

அன்று, நான் வீட்டுக்குத் திரும்பிக் கொண்டிருந்த பொழுது, முன் வீட்டு நாய் அதிசயமாக எங்கள் வீட்டு ''கேற்''றடியில் படுத்துக் கிடந்தது. ''ஒரு நாளும் தங்கள் வீட்டு வாசலைத் தாண்டாத அந்த நாய் இன்று ஏன் வீதியோரமாக அதுவும் எங்கள் வீட்டுக் ''கேற்''றடியில் வந்து கிடக்கிறது'' என்று யோசித்தேன். வீதியோரத்தில் நாட்டு நடப்புத் தெரியாமல் படுத்துக் கிடக்கிறதே; கடல் தண்ணீரைக்குடித்தோ. விசம் கலந்த சோற்றைத் தின்றோ வீணாக சாகப் போகிறதே; அதைவிட, நன்றியை நட்பை உணர்த்த உதவும் வாலையும் அறுத்து விடுவார்களே இந்த மனிதர்கள் இது தெரியாமல் சுகமாகப் படுத்துக் கிடக்கிறதே என்று நான் மிகவும் கவலைப்பட்டேன். அதை மெல்லக் கூப்பிட்டுப் பார்த்தேன். முறைத்து விட்டு மீண்டும் படுத்துக் கொண்டது. இரண்டாம் முறை கூப்பிட்ட போது இரண்டு தரம் வாலை விசுக்கியது.எனக்கு கொஞ்சம் தெம்பு வந்து விட்டது. என்னுடன் நட்பை விரும்பி வாலை அசைக்கிறதே. ஆனால் அது தன் வாலில் இருந்தஇலையானைக் கலைப்பதற்குக் கூட வாலை அசைத்திருக்கலாம்என்பது அப்போது எனக்குத் தோன்றவில்லை. மெல்லத் தடவிக் கொடுப்போம் எனக் குனிந் ...... அதற்குள் என் கையில் தன் பற்களைப் பதித்து விட்டு, நான் விழிப்படைந்து நடந்ததைக் கிரகிக்கும் முன்னரே காலிலும் தன் பற்களின் அடயாளங்களை சின்னமாகப் பதித்து விட்டு ஓடியே போய் விட்டது. என்ன செய்வது? அதற்கு நன்மை செய்ய நான் முற்பட்டதைப் பற்றி அறிந்து கொள்ளவோ, புரிந்து கொள்ளவோ அதனால் முடியாது. மடநாய்என்று இதனால்தான் சொல்கிறார்களோஎன்று கூட நினைத்துக் கொண்டேன். நல்ல வேளையாக நான் நாயிடம் கடி வாங்கியதைஒருவரும் பார்க்கவில்லை. இல்லாவிட்டால், நானே நாயுடன் வலியச் சென்று கடி வாங்கியது பெரிய கதையாகி இருக்குமே. அந்தளவில் திருப்தியடைந்து ''சும்மா கிடந்த நாய் திடீரென்று பாய்ந்து கையிலும் பிறகு காலிலும் கடித்து விட்டது''என்று சொல்லி விட்டேன்.

இது வரை ஒருவரையுமே கடித்திராத அந்த நாய் என்னைக் கடித்ததும் இரண்டு நாளாக அது ''மூட்'' சரியில்லாமல் திரிந்ததாகக் கூறிய

[5 ஆம் பக்கம் பார்க்க]

## உறுதி

எங்கள் தமிழீழ மண்ணை மிதித்திட
எவனையும் நாங்கள் அனுமதியோம்!
தங்கத் தமிழீழத் தாயகம் மீட்டிடத்
தாகமுற்றவர் தாமதியோம்!

கொள்ளையிட்டவன் குதூகலமாய் மெத்தக்
கூவிக்களித்தது அக்காலம்!
உள்ளே வரக் காலை மெள்ளப் பதித்ததும்
ஓ !! வென்றலறுதல் இக்காலம்!

சீனாவின் பீரங்கி வண்டியும் மற்றதும்
சிதறும் எங்களின் வெடிகுண்டால்
தானாக வந்திங்கு சாவதற் கிட்டமோ?
சத்தியம் தொல்லைக்கு முடிவுண்டாம்

நாளுக்கு நாளாக நரியெனத் தந்திரம்
நாற்பது பண்ணியும் தோற்கிறாய்!
மீளத் துடிக்குமெம் தாயகம் நிச்சயம்
மீள்வதையே தினம் பார்க்கிறாய்!

ஆயிர மாயிர மாகவே வந்திங்கு
ஆட்டிப் படைத்திட எண்ணமோ?
வா! இனி உங்களின் வாலை நறுக்கியே
வரலாறு படைப்பது திண்ணமே!

- நிலாதமிழின்தாசன்

நாய்குட்டிக்கும் இரவில் மட் டும் பால்மா கரைத்து வைத் தேன் ப க லி ல் வைப்பதற்கும்

இந்த மாதிரியான நல்லெண் ணத்தை மனிதர்களிடம் கூட இப்போ காண்பது அரிதாகிப்

நன்றி உணர்வைக் காட்டியது என்று இன்னும் புரியவில்லை. அதன் பிறகு எப்போதாவது

றங்களில் ''சோமாலியா''க் குழந்தையின் நெஞ்சறை எலும்புகளை நினைவு படுத்

காது என்றே நினைக்கின் றேன். கட்டாக்காலி நாய்க ளால் ஆபத்துத்தான் என்றா

- நிலாதமிழின்தாசன்

# "வரவேற்பு"

## பல்கலை புதுமுக மாணவன் ஒருவரின் நேர்முக வர்ணனை

அன்று காலை 10 30 மணி இருக்கும் நாங்கள் காத்து நின்றோம். பல்கலைக்கழகத்திற்கு தெரிவான கலைப்பீட புதுமுக மாணவர்களுக்கான வரவேற்புக் கூட்டம் 11 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் நடைபெற இருந்தது.

கைலாசபதி கலையரங்கின் பின்புறமுள்ள கட்டிடத் தொகுதியில் (முன்னர் பல்கலைக்கழக நூலகமாகவிருந்த) புதுமுக மாணவர்களான நாங்கள் ''வரவேற்பு''க்குத் தயாராக நின்றோம். 10 45 மணியளவில் அந்தக் கட்டிட வாசலில் சிறு சலசலப்பு. ''அலர்ட் அலர்ட்'' என்ற இராணுவத் தொனியிலான குரல்கள். ''வரவேற்பு''க்குத் தயாராக, மாணவர்கள் ஒரு புறமும், மாணவிகள் ஒரு புறமும் நிற்க அந்தக் ''கியூ'' நீண்டது. அந்த இரு வரிசைகளுக்கும் இடையில் சிரேஷ்ட மாணவர்களின் ரோந்து. அவர்களின் சந்தேகத்திற்கு [சந்தோசத்திற்கு!] இடமான புதுமுக மாணவர்களில் சிலர் விசாரணைக்குட்படுத்தப்பட்டனர். புதுமுக மாணவர்களை ''அறிமுகம்'' செய்து கொண்டனர். ''டேய் இருங்கடா, இருங்கடா''. 87, 88 களின் அமைதியான? அந்தக் காலம் நினைவுக்கு வந்தது. மாணவர்கள் நிலத்தில் இருத்தப்பட்டனர். மாணவர்கள், மாணவிகள் என இருந்த இரு வரிசைகளும் ஒன்றிணைக்கப்பட்டு, கைலாசபதி கலையரங்கிற்கு ''வரவேற்பு''க்காக அனுப்பப்பட்டபோது நேரம் 11 மணியாகி இருந்தது.

புதுமுக மாணவர்களுக்கு இடையிலும் முன்னும் பின்னுமாக சிரேஷ்ட மாணவர்கள். வரவேற்புக் கூட்டத்திற்கு துணைவேந்தர், மற்றும் விரிவுரையாளர்கள் வந்தபோது அமோகமான வரவேற்பு. கைதட்டல் + சீழ்க்கை + ஆரவாரம்

உபயம்- சிரேஷ்ட மாணவ குழுவினர்.

தொடர்ந்து நடந்தவை ஒரு சுருக்கம்.

''ராக்கிங் குறித்து பத்திரிகைகளில் நடக்காத அல்லது மிகைப்படுத்தப்பட்டதான செய்திகள் வெளிவரும். அது குறித்து புதுமுக மாணவர்கள் அச்சமடையத் தேவையில்லை.'' சொன்னவர் புதுமுக மாணவராக ஒருநாள் வேடம் போட்டால் புரியும்.

''சிரேஷ்ட மாணவர்கள் ராக்கிங்கை ஒரு வார காலத்துக்குள் முடித்து நிர்வாகத்துக்கு உதவ வேண்டும்.''

நிர்வாகத்தின் வேண்டுதல்.

''சிரேஷ்ட மாணவர்கள் புதுமுக மாணவர்களை அரவணைதது நடந்து கொள்ள வேண்டும்.''

ஏனோ இந்த நப்பாசை.

''ஒருத்தியும் வந்து சேருகிறாள்களில்லையே.''

ஒரு சிரேஷ்ட மாணவரின் கவலை-

வரவேற்புக் கூட்டம் ஒருபுறம் நடக்க சிரேஷ்ட மாணவர்களின் ''அறிமுகம்''.

ராக்கிங்கை அவர்கள் அப்படித்தான் குறிப்பிடுகிறார்கள்.

''புதுமுக மாணவர்களிடம் பெயரைக் கேட்டால் கூட சொல்ல மறுக்கிறார்கள். சிரேஷ்ட மாணவர்களுடன் பழக விரும்புகிறார்களில்லை.''

பெயரைத் தவிர மற்றையதை எல்லாம் கேட்டும் சொல்லும், செய்விக்கும்போது...

நவம்பர் திங்கள் 2 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமான இந்த ''அறிமுகம்'' என்ற பெயரால் சிரேஷ்ட மாணவர்களால் மேற்கொள்ளப்படும் ராக்கிங்குடன் 91/92 கல்வியாண்டு பல்கலைக்கழக அனுமதியைப் பெற்ற புதுமுக மாணவர்களின் பல்கலைக்கழக வாழ்வு தொடங்கியது. இதற்கு முன்னரே ''ராக்கிங்'' வாங்கியவர்கள் இதில் சேர்த்தியில்லை. அனேகமாக தவறாமல் அனைவரும் ''ராக்கிங்''கை முன்னரே வாங்கி; ராக்கிங் பற்றிய ஒரு அறிமுகத்தை அனுபவத்தைப் பெற்றிருப்பார்கள்.

''பல்கலைக்கழக மாணவர்களை நல்வழிப்படுத்த அவர்களை ஆன்மீகத் துறையில் ஈடுபடுத்த ஆலோசிக்கப்பட்டு வருகிறது'' வரவேற்புக் கூட்டத்தில் கேட்டதாக ஞாபகம். இதற்குத் தேவையே இல்லை. சிரேஷ்ட மாணவர்கள் ''திருக்குறள், பிள்ளையார் காப்பு'' எனறு தாமாகவே ''நவீன''மான கருத்துக்களை முன்வைத்து ஆன்மீக வழியிலேயே இறங்கி இருக்கிறார்கள்.

விதிகளை உருவாக்குவதற்கு விஞ்ஞானிகள் எத்தனையோ ஆய்வுகள், எவ்வளவோ மணிநேரங்கள் செலவு செய்து கண்டுபிடித்து அதை அறிமுகபபடுத்த இங்கே சுலபமாக ''எளிய'' பல விதிகள் விஞ்ஞான பூர்வமாக புதுமுக மாணவர்களுக்கு ஒப்பிக்கப்படுகின்றன. ஏதோ! அவர்கள் படிக்கும் படிப்பிற்கு இவ்வாறான ''விதி''கள் கூட உருவாக்கப்படாது போகுமானால் அவர்களின் வாழ்க்கை விதியில் எதையுமே சாதித்ததாகச் சந்தித்துக் கொள்ள மாட்டார்கள்.

இன்னும் ஒருநாள் உதாரணம்

''நாங்கள் எல்லாம் முந்தி படிக்கேக்க அரை மணித்தியாலத்துக்கு முந்தி லெக்சர் வகுப்புகளுக்கு வந்ததில்லை. அந்த அளவுக்கு நாங்கள் ''ராக்கிங்'' வாங்கி இருக்கிறம். இப்ப நீங்கள் அரை மணித்தியாலம் முந்தியே வாறியள். அந்த அளவில உங்களுக்கு ராக்கிங் இப்ப எவ்வளவோ குறைவு.'' தெருவில் புதுமுக மாணவர்களுக்கு நடத்தப்படும் ராக்கிங் கணக்கில் சேர்க்கபபடாமல் இந்தக் கணிப்போ...

மேலும் தொடர்ந்த அந்த லெக்சரின்போது ''நாங்கள் புது மாணவர்களாக இருந்தபோது மீசை, தாடி மழிக்காமல் வந்ததில்லை. மாணவிகள் சாறி உடுத்தாமல் வந்ததில்லை''. இந்தப் புதுமுக மாணவர்கள் ஏன் இப்படி நடக்கிறார்கள்? சிரேஷ்ட மாணவர்களின் மனதைப் புண்படுத்துவதில் இவர்கள் என்ன இலாபம் காணப் போகிறார்கள்?

யாழ். பல்கலைக்கழக சுற்றாடலை பாதுகாப்பு வலயமாக்க கோரிக்கை - பத்திரிகைச் செய்தி.

புதுமுக மாணவர்களை ராக்கிங்கிலிருந்து காக்க ஒரு வலயம் உருவாக்க இங்கு யாருமே இல்லையா?

''உங்கள் முகங்களைப் பார்க்கும்போது பேயறைந்தது போலக் காணப்படுகிறது'' வரவேற்புக் கூட்டத்தில் புதுமுக மாணவர்களை பார்த்துச் சொல்லபபட்டது. இந்தப் பேயறைந்த முகங்களில் எத்தனை முகங்கள் நாளை பேயாக மாறி. இனிவரும் புதுமுகங்களுக்கு பேயறை அறையப் போகின்றனவோ தெரியாது.

ராக்கிங்கில் மிக உச்சநிலை ''ரூம் ராக்கிங்''. இது உடல், உள ரீதியான சித்திரவதை இதுவும் இங்கே நடக்கிறது இவை பற்றிய புகார்கள் அனேகமாக வெளிவருவதில்லை. தாக்கத்திற்குட்பட்டவர் தமது எதிர்ப்பை வெளிக்காட்டத் தவறியதே அவரை ''ரூம்'' வரை அழைத்துச் சென்றது. அப்படியானவர், எப்படி ''ரூம் ராக்கிங்'' செய்தவர்களை இனங்காட்டுவார் என எதிர்பார்க்க முடியும்.

எத்தனையோ சொல்ல முடியாத துன்பங்களை சந்தித்து பல்கலைக்கழகம் நுழையும் இந்தப் புதுமுகங்களை அச்சுறுத்தி அறிமுகப்படுத்திக் கொள்ளும் இந்த ''ராக்கிங்'' கலாசாரம் என்று ஒழியும். இந்தப் புதுமுக மாணவர்கள் நினைத்தால் தமமுடனேயே இந்த ''ராக்கிங்'' கொடூரத்தை வாங்கி முடித்து வரவேற்பு, அறிமுகம் என்ற சொற்களின் அர்த்தத்தை உணர்ந்து, வரவேற்று அறிமுகமாக்கிக் கொள்வார்களா?

இன்னும் ஒரு வருடம் போக வேண்டும் பதில் தெரிய.

- தாசு

## உலகின் முதல் நிகழ்வுகள்

★ உலகின் முதல் செய்தி நிறுவனம் 1825 ஆம் ஆண்டில் பாரிஸ் நகரில் ஏற்படுத்தப்பட்டது இதனை அமைத்தவர் 'சார்லஸ் ஹாவாஸ்' என்னும் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்தவர்.

★ தபால் பெட்டிகளில் சிவப்பு வர்ணம் பூசும் வழக்கம் 1876 இல் தான் முதன் முதலாக ஆரம்பிக்கப்பட்டது.

★ தமிழில் முதன்முதலாக எழுதப்பட்ட நாவல் 'பிரதாப முதலியார் சரித்திரம்' எழுதியவர் வேத நாராயணன் பிள்ளை வெளிவந்த ஆண்டு 1989.

★ உலகின் முதல் தபால் பெட்டியானது 1855 ஆம் ஆண்டில் லண்டனில்தான் நிறுவப்பட்டது.

★ கடிகாரத்தில் வினாடி முள் முதன் முதலாக 1830 இல் உருவாக்கப்பட்டது.

★ பசை பூசப்பட்ட தபால் தலைகளை முதன் முதலாக கண்டு பிடித்தவர் ஸ்கட்லாந்தைச் சேர்ந்த ஜேம்ஸ் சாமர்ஸ் என்பவர்.

★ உலகின் முதல் போக்குவரத்து கட்டுப்பாட்டு விதியை நடைமுறைக்கு கொண்டு வந்தவர் ஜூலியஸ் சீஸர். அவர் இயற்றிய முதல் விதி ரோம் நகரில் பெண்கள் ரதங்களை ஓட்டக் கூடாதுஎன்பது தான்.

தகவல்

இ. செல்மர் எமில்

ஊர்காவற்றுறை

# இனவடிவம் பெற்றுள்ள அரசின் அரசியற் பொருளாதார நெருக்கடி

"பத்து இலட்சத்திற்கும் அதிகமான இளைஞர் இலங்கையில் வேலையற்றோராய் இருக்கின்றனர்." இப்படி அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ புள்ளிவிபரம் கூறுகின்றது.

"இரண்டு இலட்சத்திற்கும் அதிகமான ஈழத்தமிழர் ஐரோப்பிய நாடுகளிற்குக் குடிபெயர்ந்துள்ளனர்." இப்படி ஒரு புள்ளிவிபரம் கூறுகின்றது.

"இலங்கையின் பொருளாதாரம் சீரழிந்துள்ளது போலவே அமெரிக்கப் பொருளாதாரமும் சீரழிந்துள்ளது" என்று பில் கிளிங்டன் தனது தேர்தல் பிரசாரத்தின் போது குறிப்பிட்டார்.

"பிரேமதாசா அரசாங்கம் அவசரகாலச் சட்டத்தை நீக்க வேண்டும்" என எதிர்க்கட்சிகள் தரப்பில் குரல் எழுப்பப்படுகின்றன.

மேற்கூறிய நான்கு வாக்கியங்களும் எவ்வளவு தூரம் ஒன்றோடொன்று நெருக்கமாகச் சம்பந்தப்பட்டுள்ளன என்பதை பார்க்கும் போது இவை அனைத்தும் இணைந்து எவ்வாறு ஈழத்தமிழரை பெரிதும் அமுக்குகின்றன என்பதை தெளிவாகப் புரியலாம்.

இலங்கை வேலையில்லாத் திண்டாட்டத்திற் சிக்குண்டு தவிக்கும் நாடு. இலங்கை அரசின் அரசியற் பொருளாதாரக் கொள்கைகளினால் இலங்கையின் பொருளாதாரம்பெரிதும் சீரழிந்துள்ளது. தமது தவறான அரசியல் பொருளாதாரக் கொள்கைகளால் ஏற்பட்டுள்ள சீரழிவில் இருந்து ஆட்சியாளர் தம்மைத் தற்காத்துக் கொள்ள உள்நாட்டு முரண்பாடுகளைப் பெரிதும் பயன்படுத்துகின்றனர். அவற்றுள் ஒன்று இனப்பிரச்சினை.

அரசு தனக்கு ஏற்படும் நெருக்கடிகளை எல்லாம் தணிக்க, அல்லது தவிர்க்க இனப்பிரச்சினையின் பால் திரும்பி தன்னை உருமறைப்புச் செய்துகொள்கின்றது. இதுபிரேமதாசா அரசாங்கத்திற்கு மட்டுமன்றி பதவியில் இருந்த எல்லா அரசாங்கங்களுக்கும் ஒரேமாதிரிப் பொருந்தக் கூடியது. இலங்கையின் பொருளாதாரம் எப்படிச் சீரழிய நேர்ந்தது என்பது பற்றி ஆழமான அரசியற் பொருளாதார ஆய்வுகள் நடைபெறவில்லை என்றே கூறலாம். இதில் இனப்பிரச்சினையின் பங்கும் பாத்திரமும் எப்படியானது என்ற பகுப்பாய்வு பொதுவாகச் செய்யப்படவில்லை என்றே கூறலாம். இனப்பிரச்சினை அரசின் இராணுவச் செலவினங்களை அதிகரித்துள்ளது என்பது ஒருபுறமிருக்க ஏனைய வழிகளிளெல்லாம் ஆட்சியாளருக்குச் சேவை செய்யக் கூடிய வகையில் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது என்ற உண்மையைப் பார்க்கும்போது ஈழத்தமிழரின் துயரம் பல்மடங்கு துலாம்பரமாகத் தெளிவாகும்.

இரண்டு இலட்சம் ஈழத்தமிழர் இன்று ஐரோப்பாவை நோக்கிப் புலம்பெயர்ந்துள்ளனர். இவர்களில் மிகபெருமளவினர் இளைஞராவர். இலங்கையில் இன்று காணப்படும் வேலையற்ற இளைஞரின் தொகை பத்துஇலட்சத்திற்கும் மேல் என்றால் மேற்கூறிய இரண்டு இலட்சம் தமிழரும் உள்நாட்டில் இருப்பராயின் வேலைஅற்ற இளைஞர் பட்டியலின் தொகை பன்னிரெண்டு இலட்சத்தையும் தாண்டிவிடும். இப்போது வெளியே தள்ளுண்ட இரண்டு இலட்சம் ஈழததமிழரும் இலங்கை அரசிற்கு பொருளாதார ரீதியாக ஒரு ஈவை ஏற்படுத்தக்கூடிய பகுதியினர் ஆவர். உண்மையில் இலங்கை அரசின் ஒடுக்குமுறைதான் ஈழ தமிழர் பலரையும் மேற்படி வேரற்ற வாழ்வுககு வெளித்தள்ளியது எனலாம்.

இந்த இரண்டு இலட்சம் தமிழரும் ஈழத் தமிழரின் மொத்த சனத்தொகையில் சுமாராக பத்து விகிதத்தினராவார். இது ஈழத்தமிழரின் தேசிய பலத்தைப் பெரிதும் பாதிக்கக்கூடியது. இதில் இலங்கை அரசு ஒரு கல்லில் மூன்று மாங்கனிகளைப் பெற்றுக் கொள்கின்றது. ஒன்று, வேலையில்லாதோர் எண்ணிக்கையை இதனால் குறைக்கின்றது. இரண்டு இலங்கை அரசுக்கு அந்நிய நாடுகளின் காசு வரவாகக் கிடைக்கின்றது. மூன்று தமிழரின் தேசியப் பலம் குறைகின்றது.


வே அவசரகால விதியைப் பிரகடனப்படுத்தியதாக அரசு காட்டிக் கொண்டது. ஆரம்பத்தில் அது தமிழரை ஒடுக்க மட்டுமே பயன்படுத்தப்பட்டு வந்த போதிலும் தற்போது அது தென்னிலங்கையில்எதிர்க்கட்சிகளின் வளர்ச்சியையும் நடவடிக்கைகளையும் கட்டுப்படுத்துவதற்கும் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. அவசரகால விதியின் கீழ் தாம் செயற்பட முடியாதென்பதை எதிர்க்கட்சிகள் உணர்ந்துள்ள நிலையில் அவை இன்று அவசரகாலச் சட்டம் நீக்கப்பட வேண்டுமென விரும்புகின்றன. ஆனால் எதிர்க்கட்சிகளின் பிரதான ஆயுதங்களில் ஒன்றாக இனவாதம் காணப்படுவதால் வெளிப்படையாக இதனைப் பிரகடனப்படுத்த முடியாத பலவீனமும் அவர்களுக்குண்டு.

## மு. திருநாவுக்கரசு

யூதர்கள் ஒரு காலத்தில் தமது தாயகத்தை விட்டு வெளியேறி ஐரோப்பா எங்கும் பரந்து குடியேறினர். இறுதியில் ஐரோப்பியர்களால் 60 லட்சத்திற்கும் மேற்பட்ட யூதர்கள் கொன்றொழிக்கப்பட்டதுடன் ஏனையோர் ஐரோப்பாவை விட்டும் துரத்தப்பட்ட வரலாற்றை தமிழர் மறந்திட முடியாது இறுதியில் கால் வைத்த கொப்புமில்லை; கைபிடிக்க கொப்புமில்லை. என்ற ஒரு நிலையை யூதர்கள் அடைந்தனர். இலங்கை அரசின்ஒடுக்கு முறையை மேற்கூறிய கண்கொண்டு பார்ப்பதுடன் மேலும் எவ்வாறு தமக்குச் சாதகமாக இனப்பிரச்சினையை ஆட்சியாளர் கையாள்கின்றனர் என்பதைப் பார்ப்போம்

தமிழரை ஒடுக்குவதற்காக

எப்படியோ இன்று தென்னிலங்கையில் ஏற்பட்டிருக்கும் அரசியற் பொருளாதாரக் கொந்தளிப்பின் மத்தியில் பிரேமாவின் தற்காப்பு ஆயுதங்களில் ஒன்றாக அவசரகாலச்சட்டம் காணப்படுகின்றது. இந்த அவசர காலச் சட்டத்தை இவ்வளவு இலகுவாகப் பிரேமதாசா வைத்திருக்க ஏதுவாக அமைந்துள்ள காரணி இனப்பிரச்சினைதான் இவ்வாறாக இனப்பிரச்சினையை ஆட்சியாளர் தமக்குச் சாதகமானதாக மாற்றியமைத்துள்ளனர். ஆனால் இதில் எல்லா வகையிலும் நசுக்கப்படுவது தமிழர்தான். இதனால் தமிழரின் நலனுக்காகக் குரல் எழுப்புவதுதான் முதன்மையான ஜனநாயக மீட்பு என்பதை ஜனநாயக மீட்பு பற்றிப் பேசும் சிங்களத் தலைவர்கள் உணர்ந்து கொள்வார்களா?



## 'மிதக்கும் செர்னோபில்'

"மிதக்கும் செர்னோபில்" தனது பயணத்தை ஆரம்பித்துள்ளது. "அகாட்சுகி மாரு" என்னும் பெயருடைய ஜப்பானியக் கப்பல் 17 தொன் எடையுள்ள கதிர்த்தாக்கம் ஏற்படக்கூடிய புளுட்டோனியத்துடன் தனது பயணத்தை ஆரம்பித்துள்ளது. உலகெங்கும் இருக்கும் அணு ஆயுத எதிர்ப்பு இயக்கத்தாரும், கிறீன்பீஸ் இயக்கத்தினரும் சோவியத் யூனியனில் இருந்த செர்னோபில் அணு உலை விபத்துடன் ஒப்பிட்டு இக் கப்பலை மிதக்கும் செர்னோபில் என்று வர்ணித்து இதன் பயணத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர்.

பிரான்சின் செர்போர்க் துறைமுகத்திலிருந்து புறப்பட்டுள்ள இக்கப்பல் மத்தியதரைக் கடலுக்கு வந்து அங்கிருந்து இந்து சமுத்திரம் ஊடாக மலாக்கா நீரிணை. வழியாக ஜப்பான் சென்றடையவுள்ளது. 3800 தொன் எடையுள்ள கப்பலில் 17 தொன் எடையுள்ள கதிரியக்க புளுட்டோனியம்ஏற்றப்பட்டுள்ளது. இதில் ஏற்படக்கூடிய சிறிய தொரு கசிவும் பெருந்தொகையான உயிர்களை காவு கொள்ளும் என்றும்,இவ்வாறு புளுட்டோனியம் ஏற்றப்படுவது இப்போதுதான் தொடங்குகின்றது என்றும் கிறீன்பீஸ் இயக்கப் பேச்சாளர் ஒருவர் கூறியுள்ளார்.

இக் கப்பலில் புளுட்டோனியம் ஏற்றப்படுவதற்கு ஆட்சேபம் தெரிவித்து கிறீன்பீஸ் இயக்கத்தினர் மேற்கொண்ட ஆர்ப்பாட்டத்தை தடுக்க பிரெஞ்சு பொலிசார் நடவடிக்கை எடுத்ததில் கிறீன்பீஸ் இயக்கத்தினர் இருவர் படுகாயமடைந்தனர்.

"அகாட்சுகிமாரு" கப்பலின் பயணப்பாதை நெடுகிலும் ஜப்பானின் கடலோரப் படையின் பாதுகாப்பு வழங்கப்பட இருப்பதுடன், அமெரிக்காவின் சற்றலைட் மூலமான கண்காணிப்புடன் அமெரிக்க போர்க்கப்பல் மற்றும் போர் விமானங்களும் அதன் நடமாட்டத்தை தொடர்ந்து கண்காணிக்க உள்ளது.

இக் கப்பல் வருகையை சிலி அரசாங்கம் தடைசெய்திருப்பதுடன், சிலிக் கடற்பரப்பின் ஊடாகக் கப்பல் பயணம் செய்வதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது. பாதுகாப்பு காரணங்களுக்காக இக் கப்பலின் வருகையை தடைசெய்ய சட்டத்தில் இடம் இருக்கிற போதும் இன்னமும் அவ்வாறு முடிவு எதுவும் செய்யப்படவில்லை என்று மலேசியா சுற்றுப்புறச் சூழல் அமைச்சர் கூறியுள்ளார். எனினும் இந்தோனேசிய அரசாங்கம் இக் கப்பலுக்கு பாதுகாப்பு வழங்கத் தீர்மானித்துள்ளது.

## கருப்பு ஊசி

தும் அதைவிசர்நாயோ என்று சந்தேகப்பட வைத்துவிட்டது ஆஸ்பத்திரியில் ஏ. ஆர். வி ஊசி இல்லை என்று கையை விரிசது விட்டார்கள். கப்பல் வந்தால்தான் இனிஊசி என்ன செய்வது அது விசர் நாயாக இல்லாவிட்டால்பிரச்சினையே இல்லை அந்த நாய் சில நாட்களுக்குள் செத்துப் போனால்

## தினந்தோறும்

உண்மையில் கல்லால் ஆன விண்கற்கள் இரும்பாலான விண்கற்களை விட ஒன்பது மடங்கு அதிகம் என ஆராய்ச்சிகள் தெரிவிக்கின்றன.

விண்கற்களால் இதுவரை மனிதருக்கோ பொருள்களுக்கோ சேதம் விளைந்ததாக தகவல் இல்லை. எனினும் பல முறை பெரிய விண்கற்கவேண்டும் என்பதற்கு அறிகுறிகள் உள்ளன. அரிஜோனாவில் சுமார் 4225 அடி விட்டமும் 600 அடிஆழமுமான ஒரு பெரிய வட்டவடிவமான பள்ளம் உள்ளது. இதனைச் சுற்றி 100 முதல் 150 அடிகள் உயரத்திற்கு மண்சுவர் போன்ற அமைப்புக்காணப்படுகின்றது. இது சந்திரனில் உள்ளபள்ளத்தைப் போன்றதாக காணப்படுகின்றது.

தொன்கள் நிறையுள்ள எரிகற்களும் தூசுகளும் பூமியில் வீழ்கின்றன எனவும் கணக்கிடப்பட்டுள்ளது.

இதேவேளை பல பெரியளவு விண்கற்கள் சூரியனைச் சுற்றி வலம் வந்து கொண்டிருக்கின்றன. இவை கோள்களைப் போன்றவைஆனால்சிறியவை. இக்கோள்களில் மிகப்பெரிதானஈரோஸ் என்பதுசெங்கல்

## கப்டன் மதியழகனுக்கு மக்கள் அஞ்சலி

(வடமராட்சி)

கிளாலி கடல் பகுதியில் நடைபெற்ற நேரடிமோதலில் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட கப்டன் மதியழகன் (நடராசா- ரஜிஸ்குமார்புதுக் கலட்டி - அல்வாய் தெற்கு பகுமுடல் நேற்றுப் முன்தினம் ...யின் மத்தியில் மலரஞ்சலி செலுத்தினர் அதனையடுத்து பருத்தித்துறை அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. பா. பைந்தமிழன் தலைமையில்,வடமராட்சி அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. அரசண்ணா மற்றும் கவிதா

## செவிப்புலனற்றோர் புனர்வாழ்வு நிலைய தடகள விளையாட்டு

யாழ். செவிப்புலனற்றோர் புனர்வாழ்வு நிலைய விளையாட்டுக்கழகத்தினால் நடாத்தப்படும் தியாகி திலீபன் ஞாபகார்த்த தடகள 2-வது ஆண்டு விழா விளையாட்டு இறுதிப் போட்டியும்பரிசளிப்பு நிகழ்வும் வரும் 15. 11. 92 அன்று பகல் 12. 00 மணியள

களுக்குள் செத்துப் போனால் இன்னும் கொஞ்ச நாட்களின் பின்னர் நானும் சாக வேண்டியதுதான் என்னவோ சாவது என்பது பெரிய விசயமில்லை என்று என்னை நானே தேற்றிக் கொண்டாலும் விசர் நாய் கடித்து இறநதவர்களின் இறுதி நிமிடங்கள், மணித்தியாலங்கள், நாட்கள் பற்றி நான் கேட்டவைகள் என்னை மிகவும் பயமுறுத்தவே செய்தன. வீட்டில் வைரவருக்கு வேண்டுதல் அந்த நாய் சாகக் கூடாது என்று தான். இந்த நிலையில் செய்யக் கூடியது இது ஒன்று தானே. அந்த நாய் செத்துப் போனால் நான் செத்ததிற்குச் சரி. ஒவ்வொரு நாள் விடியலும் திகிலாகவே இருந்தது. காலையில் எழுந்தவுடன் முன் வீட்டு நாய் உயிருடன் இருப்பதை உறுதி செய்து கொள்வதுதான் முதல் வேலை. நாய் என்னவோ அமைதியாகவே இருந்தது. நான் தான் அமைதி இழந்து தவித்தேன். இரவில் அடிக்கடி திடுக்கிட்டு விழித்தேன். நான் விழிக்கும் போதெல்லாம், எங்கோ தூரத்தில் ஒரு நாயின் ஊளைச் சத்தத்தையும் கேட்க வேண்டியிருந்தது கனவிலே பல முறை செத்துப் போய், காலையில் சாகாமல் எழுந்தேன் என்னவோ நாய் படாப் பாடு படுவது என்பதை இப்போது தான் புரிந்து கொண்டேன்.

பலரது வைத்திய ஆலோசனைளுக்கு இணங்க ஊரில் எனக்கென்றே தேடி எடுக்கப்பட்ட இல்லாத பொல்லாத மர வேர்களையும் அவித்து குடிக்க வேண்டிய நிலைக்கு நான்தள்ளப்பட்டேன். அதைக் குடிதிப்பலும் பார்க்க எப்படியென்றாலும் உடனேயே செத்து விடுவது மேல் என்ற அளவில், அந்தத் திரவங்கள் வாசனையையும், சுவையையும் கொண்டிருந்தன. இந்த நாட்களுக்குள் எனது அற்பமான விருப்புகளை நிறைவேற்றிக் கொள்ளக் கூடியதாக இருந்தது. நான் எது கேட்டாலும், உடனேயே நிறைவேற்றி வைக்கப்பட்டது. இரண்டு நாட்களிலேயே அதுவும் அலுத்து விட்டது.

நாய் கடித்து நான்காம் நாள் யாரோ சொன்னார்கள் என்று. நாய் மீது விசர்ப் பரிசோதனை. ஆம் இப்படித் தானே கூறவேண்டும். நாய்க்கு விசர் ஏறபட்டுள்ளதா? இல்லையா? என்பதை தீர்மானிக்க மேற்கொள்ளப்படும் பரிசோதனையை வேறு எவ்வாறு அழைப்பது? சுகமாய்த் தூங்கிக் கொண்டிருந்த நாய் மீது தண்ணீரை ஊற்ற, அது கனவு கண்டு விழித்தவனைப் போல. உதறிக் கொண்டு எழுந்தது. பல பேர் தடிதண்டுகளோடு நிற்பதைக் கண்டதும், நாய் ஓட்டத்தில் வீதியைத் தேடி ஓடி தன் விதியை நிர்ணயித்துக் கொண்டது. நாய் வீதிப்பக்கமாக ஓட, குறுக்கே வாகனம் வந்ததா? வாகனத்திற்கு குறுக்கே நாய் ஓடியதா? என்பதை சிந்திப்பதற்குள், நாய் சத்தமில்லாமல் செத்துப் போனது.

இனி என் கதி என்னாவது? நாய் விசர் வந்து சாகவில்லை என்ற நம்பிக்கையுடன் நாளைய பொழுதை எதிர் பார்ப்பதா? அல்லது எல்லோரும் "குமண"வில் கடிதம் வருமா? மண்ணெய் வருமா? என்று பார்த்திருக்க, நான் மட்டும் வருமா ஏ. ஆர். வி. ஊசி என்று நாளை வரப் போகும் "குமண"விற்காகக் காத்திருப்பதா?

பல முறை பெரிய விண்கற்கள் பூமியைத் தாக்கியிருக்கின்றன. 1908 ஆம் ஆண்டு சைபீரியாவில் விழுந்த விண்கல் பூமியில் 150 அடிகள் விட்ட அளவுள்ள குழியைத் தோண்டியது. அத்துடன் அந்த இடத்தைச் சுற்ற 20 மைல் விட்டத்திற்கு மரங்கள் அனைத்தும் சாய்க்கப்பட்டன. இக்கல்லின் நிறை 40,000 தொன்கள் என தெரிவிக்கப்படுகிறது.

இதனைவிட பெரியவிண்கற்கள். வரலாற்றுக் காலத்துக்கு முன்பே பூமியைத் தாக்கியிருக்

தைப் போன்றதாக காணப்படுகின்றது.

இதனை முதலில் அடங்கி விட்ட எரிமலைஎன்றே நம்பினர். ஆனால் சுரங்கப் பொறியியலாளரான டி. எம். பேரிங்கர் என்பவர் இதனைவிண்கல்லின் தாக்குதலால் உருவானது என அறுதியிட்டு கூறினார். இதனால் இப்பள்ளம் 'பேரிங்கர் பள்ளம்'' என பெயரிடப்பட்டது. இப்பள்ளத்தைச் சுற்றி பல மில்லியன் தொன்கள் இரும்பு வெட்டி எடுக்கப் பட்டுள்ளது.

இதேபோன்ற பள்ளங்கள் பூமியின் ஏனையபகுதிகளிலும் நீராலும் வளரும் தாவரங்களாலும் மறைக்கப்பட்டுவிட்டன. பல மில்லியன் ஆண்டுகளுக்கு முன் உண்டாகிய பல பள்ளங்கள் வான்வெளியில் இருந்து அவதானிக்கப்பட்டுள்ளன.

வான் வெளியிலிருந்து வளிமண்டலத்திற்குள் பிரவேசிக்கும் பொருள்களில் மிகக் குறைந்த அளவுதான் பூமியை அடைகின்றன. பெரும்பகுதி வளியிலேயே எரிந்துவிடுகின்றன. நட்சத்திரம்போல் பிரகாசிக்கும் ஒரு எரிகல் வளிமண்டலத்தினுள் பிரவேசிக்கும் போது அதன்நிறை ஒருகிராம் ஆகும். இன்னும் சில ஒருகிராமின் பத்தாயிரத்தில் ஒருபங்கு தான் இருக்கும்.

நாள்தோறும் ஏறத்தாழ ஒருகிராம்நிறையுடைய20,000 எரிகற்களும், அதனிலும் நிறை குறைந்த 200 மில்லியன் எரிகற்களும் இவற்றைவிட அதிகமான எண்ணிக்கையான துகள்களும் வளிமண்டலத்திற்குள் பிரவேசிக்கின்றன,

செய்மதிகளின் உதவியுடன் பூமியின் வளிமண்டலத்திற்குள் பிரவேசிக்கும்எரிகற்களின் நிறை அளவிடப்பட்டுள்ளது. தினந்தோறும் வளிமண்டலத்தினுள் சுமார் 3.000 தொன்கள்நிறையுள்ள எரிகற்கள் வருகின்றன. இவற்றில் 80 சதவீதமானவை வீழ்வதை வெறும் கண்களால் பார்க்க முடியாது. ஆண்டு தோறும் ஐந்து மில்லியன்

தானஈரோஸ் என்பதுசெங்கல்லைப் போன்றது இதன்நீளம் 15 மைல்களும் அகலம் ஐந்து மைல்களும் ஆகும். இது பூமியைத் தாக்குமானால் 100 மைல்விட்டமுள்ள பெரும் பள்ளத்தை தோண்டிவிடும்.

இது தனது பாதையில் வரும்போது 13 மில்லியன் மைல்கள் தூரத்தில் பூமிக்கு அண்மையில் வந்துள்ளது. எனினும் இச்சிறிய கோள் பூமியில் வீழும் சாத்தியம்குறைவென்றே கருதப்படுகிறது.

இவ்வகையாக பூமிக்கு வெளியே விண்வெளியிலிருந்து கிடைக்கும் விண்கற்களை வானியலாளர்புவிச்சரிதவியல் ஆராய்ச்சியாளர், இரசாயன நிபுணர்கள் ஆகியோர் ஆராய்ச்சி செய்து வருகின்றனர். இதன்மூலம்சூரியக்குடும்பத்தின் வரலாற்றை அறியமுற்படுகின்றனர்.

இவ்விண்கற்களை சூரியக் குடும்பத்தின் மாதிரிப்பொருளாக எடுத்துக்கொண்டு கதிரியக்க பொருள்களின் தேய்விலிருந்து சூரியக்குடும்பத்தின் வயதைக் கண்டுபிடிக்க முயற்சித்துவருகின்றனர். இதன் மூலம் சூரியக்குடும்பத்தின் வயதுஐந்து பில்லியன் வருடங்கள் என இவர்கள் கருதுகின்றனர்.

## சிரித்திரன்

நிலையத்தை அலங்கரிக்கிறது. பொரளையில் காலம் சென்ற என். எம். பெரேராவின் வீட்டில் நான் வரைந்த டிரெஸ்கியின் படம் வைக்கப்பட்டுள்ளது. இவ்வகை ஓவியங்களை நான் தொடர்ந்து வரையவில்லை அதில்எனக்கும் 'பலன்' இல்லைப் போலும். கருத்தோவியத்தின் மூலம் செய்தியைச் சொல்ல வேண்டும் என்று தான் உணர்ச்சி பூர்வமாக ஈடுபட்டதால் ஓவியத்தில் வேறு வடிவங்களில் புலன் செலுத்தவில்லை.

★ பொதுவாகக் கலையைப் பற்றிய உங்கள் கருத்தென்ன?

வாழ்க்கையோடு இனிது இணைந்திருப்பதுதான் கலை, நம் ஓவிய உணர்வோ இன்றளவும் மிகவும் பலவீனமாக இருந்து வருகிறது. கலைக்கு வெளிநாட்டில் உள்ள மதிப்பு இங்கில்லை எமது பள்ளிக்கூடங்கள் கூட ஓவியத்தைத் தீவிரமாக எடுத்துக்கொள்வதில்லை. இலகுவான பாடம் என்று ஓவியத்தை நாடுகிறார்கள். இது ஒரு ஆரோக்கியமான சூழ்நிலை அன்று. அதாவது ஒரு கலையில் எமக்குப் பரிச்சியம் இருக்க வேண்டும் அல்லது காலத்தின் கோலத்தில் கலைமெல்லக் கலைத்துவிடும்.

புகழுடல் நேற்றுப் முன்தினம் பகல் மாலிசந்தி சதாபொன்ஸ் தனியார் கல்வி நிலையத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது.

புகழுடலுக்கு மக்கள் மலை அரசண்ணா மற்றும் கவிதா ஆகியோர் அஞ்சலி உரை நிகழ்த்தினர்.

பின்னர்புகழுடல் நவிண்டில் மாவீரர்துயிலும் மயானத்தில் விதைக்கப்பட்டது. [யோ]

அன்று பகல் 12. 00 மணியளவில் யாழ். செவிப்புலனற்றோர் புனர்வாழ்வு நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்ச்சிக்கு பிரதம விருந்தினராக யாழ் அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. சி. இளம்பரிதி அவர்கள் கலந்து கொள்ள உள்ளார்.

# 8 பிரதேச செயலகங்கள் நிறுவுவதற்கு ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்கில் ஆரம்பத்தில் எட்டுப் பிரதேசச் செயலகங்கள் நிறுவுவதற்கு ஆயத்தங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. வடக்கு - கிழக்கில் 21/92 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் பிரகாரமே எட்டுப் பிரதேசச் செயலகங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன. எனினும் காலப்போக்கில் மொத்தமாக எழுபது பிரதேசச் செயலகங்கள் நிறுவப்படும் என அறிவிக்கப் பட்டுள்ளது.

1-1-93 இல் பிரதேசச் செயலகங்கள் நடைமுறையில் வருவதற்கு நிதி நிர்வாக ஒழுங்குகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

# வேலைவாய்ப்பற்ற பட்டதாரிகளுக்கு பயிற்சி

வேலை வாய்ப்புக் கிடைக்காதபட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பு வழங்கும் முகமாக பட்டதாரிகளுக்கான பயிற்சித் திட்டம் ஒன்று நடைமுறைப் படுத்தப்படவிருக்கிறது.

இப்பயிற்சித் திட்டத்தில் இணைந்து கொள்ளவிரும்பும் வேலைவாய்ப்புக் கிடைக்காத பட்டதாரிகள் தமது பெயர்களைப் பதிவு செய்வதற்கு கோரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது.

பணிப்பாளர், (பட்டதாரிப் பயிற்சித் திட்டம்) கொள்கைத் திட்டமிடல் செயற்படுத்தல் அமைச்சு, மூன்றாம் மாடி, செத்சிறிபாய, பத்திரமுல்ல. என்ற முகவரியுடன் நேரடியாகத் தொடர்பு கொள்ளும்படி மேற்படி பட்டதாரிகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டிருக்கிறது அதே வேளை மேற்படி பயிற்சித் திட்டத்தில் பட்டதாரிகளைப் பதிவு செய்வதற்குத் தேவையான விண்ணப்பப் படிவங்களை பெற்றுக்கொள்வதற்கு யாழ். செயலகம் முயற்சி எடுத்து வருகிறது. (பா)

## தபால் நிலையத்தில் கொடுப்பனவுகள்

காங்கேசன்துறை தெல்லிப்பழையில் இதுவரை காலமும் உதவி அரசாங்க அதிபர், கிராமசேவையாளர்களால் கொடுக்கப்பட்டு வந்த மாதாந்த உதவிப்பணக் கொடுப்பனவு இன்று தொடக்கம் அப்பகுதி தபால் நிலையங்களில் கொடுப்பனவு செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

எனவே இப் பணக்கொடுப்பனவுகளைப் பெறும் பொது மக்கள் சுன்னாகம் புகையிரத வீதி- மின்சார நிலைய வீதி சந்தியில் இயங்கும் காங்கேசன்துறை தபால் நிலையத்திலும், சுன்னாகம் கந்தரோடை வீதியில் இயங்கும் தெல்லிப்பழை தபால் நிலையத்திலும் பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## காய்ச்சலுக்கு சிறுமி பலி

(வடமராட்சி)

கடும் குளிருடன் ஏற்பட்ட காய்ச்சல் காரணமாக கரவெட்டியைச் சேர்ந்த சிறுமி ஒருவர்மரணமடைந்துள்ளார். மதியாபரணம் வித்தியா (வயது7.) என்ற இச் சிறுமியே மேற்படி நோய் காரணமாக மரணமடைந்துள்ளார்.

(யோ)

# தனியார் கல்வி நிறுவன வகுப்புக்கள் நடைபெறாது

நாளை சனிக்கிழமை பாடசாலை நடைபெற உள்ளதால் பி ப இரண்டு மணிவரை எந்த ஒரு தனியார் கல்வி நிறுவனமும் வகுப்புக்களை நடாத்த வேண்டாம் என யாழ். மாவட்ட தனியார்கல்வி நிறுவன ஒன்றிய பொதுச் செயலாளர் அறிவித்துள்ளார்.

ஈழநாதம்

# லெபனான் கிராம தளம் மீது இஸ்ரேல் விமானங்கள் தாக்கு

இஸ்ரேலிய போர் விமானங்கள் நேற்று முன்தினம் இரவு லெபனானுள் நுழைந்து தாக்குதலை நடாத்தியுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இவ் விமானங்கள் லெபனானிலுள்ள ஹிஸ்புல்ல தளம் மீது பலமான தாக்குதல்களை நடாத்தியதாக தெரியவருகிறது. மேற்கு லெபனானில் கிராமம் ஒன்றில் அமைந்துள்ள தளம் மீதே இத்தாக்குதல் நடத்தப்பட்டதாக இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

இராணுவ ரீதியாக இஸ்ரேல் மீது லெபனான் தாக்குதல் நடாத்த திட்டமிட்டிருந்ததாகவும் இதனை முறியடிக்கவே இவ் விமானத் தாக்குதல் நடாத்தப்பட்டதாகவும் இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

இதற்கு பதிலடியாக இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்தப்படும் என லெபனான் எச்சரித்துள்ளது. அவ்வாறான நடவடிக்கை எதனையும் லெபனான் மேற்கொள்ள முயலாது என தாம் நம்புவதாகவும் தவறின் விளைவுகளைச் சந்திக்க தயாராக இருக்க வேண்டும் எனவும் இஸ்ரேல் எச்சரிக்கை விடுத்துள்ளது.

## பாகிஸ்தான் எல்லையில் முட்கம்பிவேலி; ஒளிவெள்ளம்

பாகிஸ்தானின் எல்லையிலிருந்து பஞ்சாப் மாநிலத்திற்குள் ஊடுருவல் வருவதனைத் தடுப்பதற்காகப் பஞ்சாப் மாநிலத்தில் 554 கிலோ மீற்றர் நீளத்திற்கு உள்ள இந்திய பாகிஸ்தானின் எல்லையில் முட்கம்பி வேலிகள் போட்டு அடைக்கப் பட்டுள்ளதாகவும், ஒளிவிளக்குகள் போடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கள்ளக்கடத்தல்காரர்களும் பாகிஸ்தானில் உள்ள பயிற்சி பெற்ற தீவிரவாதிகளும் பஞ்சாப் மாநிலத்தில் ஊடுருவல் செய்வதனைத் தடுக்கவே இந்த நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதாக இந்திய உள்துறை அமைச்சர் எம். எம். ஜேக்கப் தெரிவித்தார்.

# வவு. விவசாய கல்லூரிக்கு அவுஸ்திரேலியா அன்பளிப்பு

(வவுனியா)

வவுனியா விவசாயக் கல்லூரிக்கு அவுஸ்திரேலியா அரசாங்கம் 68 இலட்சம் ரூபா பெறுமதியான ஆய்வுகூடப்பொருள்கள் அன்பளிப்புச் செய்துள்ளது.

விவசாயப் பாடசாலையிலிருந்த காணியில் இந்த விவசாயக் கல்லூரி அமைக்கப்பட்டு, இரசாயன ஆய்வு கூடங்கள் பல இலட்சம் ரூபா பெறுமதியில் அமைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

இதுதவிரவிரிவுரையாளர்கள் தங்கும் விடுதியும் அமைக்கப் படும் என்று தெரிவிக்கப்பட்டது. [தி]

## வயிற்றோட்ட நோய்; 172 பேர் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் வயிற்றுளைவு, வயிற்றோட்டம் ஆகிய நோய்களுக்காக சுமார் 172 பேர் கடந்த ஒக்டோபர் மாதம் மருத்துவ மனையில் சிகிச்சை பெற்றுள்ளனர். இம் மாதம் இது இன்னும் அதிகரிக்கும் சாத்தியம் இருப்பதாகவும் இதனை கட்டுப் படுத்த பொதுமக்களின் ஒத்துழைப்பு தேவை எனவும் வைத்திய உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கடந்த ஒக்டோபர் மாதம் மானிப்பாய் பகுதியில் 42 பேரும், கோப்பாயில் 13பேரும் தெல்லிப்பழையில் 21 பேரும், சாவகச்சேரியில் 85 பேரும், பருத்தித்துறையில் 10 பேரும் இந் நோயினால் பாதிக்கப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இடம் பெயர்ந்து மக்கள் நெருக்கமாக வாழும் பகுதிகளில் இந்நோய் வேகமாக பரவி வருவதாக புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

ஈக்களை ஒழிப்பதன் மூலம் இந்நோயைத் தடுக்க முடியும் என்றும், கொதித்தாறிய நீரை குடிபபதன் மூலம் நோய் பரவுவதனைத்தவிர்த்துக் கொள்ளலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தற்கொலை

(வவுனியா)

கொந்தக்காரன் குளம் பகுதியைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவர் அரளிக்காய் உண்டு தற்கொலை செய்து கொண்டார்.

ஆறு பிள்ளைகளின் தந்தையான ஐ. பாலசிங்கம் என்பவரே தற்கொலை செய்து கொண்டவராவர். கடந்த 10 ஆம்திகதி இவர்குடும்பத்தகராறுகாரணமாகவே தற்கொலை செய்து கொண்டார் என்று தெரிவிக்கப்பட்டது. (தி)

## போலியோ அபாயம் தடுப்பூசி போடவும்

(யாழ்ப்பாணம்)

இந்த வருடம் தொற்று நோய்பரப்பும் விஷக்கிருமிகளின் (வைரஸ்) தாக்கம் அதிகமாக இருக்கும் என்றும், இதனால் போலியோ நோய் அதிகரிக்க கூடிய ஏதுக்கள் இருப்பதாக யாழ் வைத்திய வட்டாரங்கள் தெரிவித்தன.

ஆறு ஆண்டுகளுக்கு ஒருமுறை இந்த வைரஸ் தாக்கம் நிகழ்வதினால் 1986 பிற் பகுதியிலும் 1987 ஆம் ஆண்டு முற்பகுதியிலும்போலியோபரவியதாகவும், எனவே ஐந்து வயதிற்கு உட்பட்ட சகல பிள்ளைகளுக்கும் தடுப்பூசி போடுமாறும் அவ்வைத்திய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பருத்தித்துறையில் மூவருக்கு போலியோ நோய் அறிகுறி இருப்பதாக சந்தேகிக்கப் பட்டுள்ளதாகவும், மாதிரிகள் பரிசோதனைக்காக கொழும்புக்கு அனுப்பிவைக்கப்பட்டிருப்பதாக அவ் வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

## தமிழர் புறக்கணிக்க பட்டதே பிரச்சினைக்கு காரணம்

சிறுபான்மை மக்களை புறக்கணிக்கப் போனதால் தான் வடக்கு - கிழக்கு பிரச்சினை உக்கிரமடைந்துள்ளதுடன் இப்போது போராக வெடித்துள்ளது என ஊவா மாகாண சபை உறுப்பினர் வே. வேலாயுதம் ஊவா மாகாண சபையின் வரவுசெலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டு விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போது தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில்; ஊவா மாகாணத்தில் சிறுபான்மை மக்களின் கைத்தொழில் விவசாய தொழில் வாய்ப்பு விடயங்களில் 1993 க்கு ஒதுக்கப்பட்ட நிதியைப் பார்த்தால் அதிர்ச்சி அளிப்பதாகவே உள்ளது இதில் இருபத்தைந்து சதவீத ஒதுக்கீடு கூட சிறுபான்மை மக்களுக்கு இல்லை. இதனால் மலையக சமுதாயம் விரக்தி நிலைக்கே தள்ளப்பட்டுவிடும் எனத் தெரிவித்தார்.

## சூறாவளி

நீர்கொழும்பிற்கும் இடையாக இலங்கையை விட்டு நகர்ந்து செல்லும் என தெரிவிக்கப்படுகிறது.

இன்றும்காற்றுடன்கூடியமழை தொடர்ந்து இருக்கும் எனவும் மாலையில் கால

## இயம சம்ஹாரம்

''இயமசம்ஹார உற்சவம்'' இன்று மாலை 3.00 மணிக்கு நல்லூர் சிவன் கோவிலில் வழமைபோல் நடைபெறஉள்ளது.

இவ் உற்சவத்தின் விசேட நிகழ்வுகளாக மாலை 2 30 மணிக்கு மார்க்கண்டேயபூசை, 3.30 மணிக்கு வசந்த மண்டப பூசை, 5.00 மணிக்கு இயம சம்ஹார உற்சவம் ஆகியவை நடைபெற உள்ளன.

---

# மரண அறிவித்தல்

## வைத்திலிங்கம் பொன்னம்மா

சரசாலை வடக்கைச் சேர்ந்த வைத்திலிங்கம் பொன்னம்மா 1992. 11. 11ஆம் திகதி இரவு காலமாகிவிட்டார். அன்னார் காலஞ்சென்ற வைத்திலிங்கத்தின் அன்பு மனைவியும், வசந்தகுமாரி (ஆசிரியை, மகாவித்தியாலயம் அக்கராயன் கிளிநொச்சி), தங்கேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும், செல்வரத்தினத்தின் அன்பு மாமியும், சுகர்ணன், சுமணன், தாரணி, தரனீதரன் ஆகியோரின் பாட்டியாருமாவார். ஈமக்கிரியைகள் 1992. 11. 12 வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று சரசாலை கொம்பிகுளம் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

சரசாலை, வடக்கு.

தகவல்:
சு. செல்வரத்தினம்
மருமகன்

(3359)

---

நல்லூர் பிரதேச சபை - திருநெல்வேலி, யாழ்ப்பாணம்

# கேள்வி அறிவித்தல் - 1993

நல்லூர் பிரதேச சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட கீழ்க்காணும் சந்தைகள், இறைச்சிக்கடைகள் 1993ஆம் ஆண்டு தை மாதம் 1ஆம் திகதி தொடக்கம் மார்கழி

---

## மாவீரர்களே!

உங்களைப் புதைத்த மண் உறங்காது
உரிமைகள் பெறும்வரை கலங்காது
எங்களின் தாயகம் விடிவுபெறும் - புலி
ஏறிய கொடியுடன் ஆட்சி வரும்.

[மாவீரர் நாள் - 1992 சுவரொட்டிகள் பதாதை வசனங்கள்]


## திருமலையில் கடும் மழை

திருக்கோணமலை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் நேற்று காற்றுடன் கூடிய கடும் மழைபெய்துள்ளது.

நேற்று மாலை 4.30 மணி வரை தொடர்ச்சியாக பொழிந்த மழை காரணமாக பல பகுதிகளில் வெள்ளம் தேங்கியிருந்தது. கடும் காற்றுக் காரணமாக ஆங்காங்கே ஒரு சில கட்டடங்களின் கூரைகள் தூக்கி வீசப்பட்டுக் காணப் பட்டன. சில குடிசை வீடுகள் காற்றினால்அடிக்கப்பட்டு சேதமடைந்துள்ளன. (அ

---

# 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
1963-10-01

மறைவு
1990-11-13

## மயில்வாகனம் மங்களேஸ்வரன்

பாசமே பண்பின் உருவே......
வாசமாய் மலர்ந்த மலரே
நேசமாய் நினைவில் நிறையும்
நிகரில்லா அன்புக் கடலே
மங்களம் நிறைந்து ஒலிக்கும்
மங்களேஸ்வரனே...... மகனே
கடை தனில் லாப நஷ்ட
கணக்கதை கணித்து விட்டு
இரவாகி வீடு வந்தாய்
இறைவனோ உனது கணக்கை
அவ்விரவோடு தன் வரவில் வைத்தான்
குடம்...... குடமாக அழுதோம்
குறைந்ததா...... இதய சோகம்
கும்பிட்டுக் கொண்டோம் இன்று
குமரனடிதனில் சாந்தி பெறட்டும்.
சாந்தி...... சாந்தி...... சாந்தி.

உங்கள் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர், உறவினர், நண்பர்கள்.

வற்றாப்பளை.
முள்ளியவளை.

தி. மயில்வாகனம்
விநாயகர் ஸ்ரோர்ஸ்
முள்ளியவளை.

(3636)

---

# உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

நல்லூர் பிரதேச சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட கீழ்க்காணும் சந்தைகள், இறைச்சிக்கடைகள் 1993ஆம் ஆண்டு தை மாதம் 1ஆம் திகதி தொடக்கம் மார்கழி மாதம் 31 ஆம் திகதிவரை குத்தகைக்கு விற்பனைசெய்வதற்கு அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் யாவும் 1-12-92 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப்பத்திரங்கள் யாவும் நல்லூர் பிரதேச சபை செயலாளரால் கேள்விவைப்புப்பணம், பத்திரப்பணம் ஆகியன செலுத்தியதன்பேரில் 18- 1-92 தொடக்கம் 25-11-92 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிவரை வழங்கப்படும். பூர்த்திசெய்யப்பட்ட கேள்விப் பத்திரங்கள் யாவும் 01-12-92 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்குப் பிந்தாமல் கிடைக்கக் கூடியதாக மூலப்பிரதியை விசேட ஆணையாளர், நல்லூர் பிரதேச சபை, திருநெல்வேலி, யாழ்ப்பாணம் எனவும் இணைப்பிரதியை உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சித் திணைக்களம், யாழ்ப்பாணம் எனவும் பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். அல்லது காரியாலய கேள்விப்பெட்டியில் போடவும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''குத்தகை கேள்வி - 1993'' என எழுதுதல் வேண்டும். கேள்விப்பத்திரம் பெற விரும்புவோர் அடையாள அட்டையுடன் முன் அனுபவ அத்தாட்சியும் சமர்ப்பிக்கவேண்டும்.

தெரிவுசெய்யப்படும் கேள்விக்காரர் கேள்வி அறிவித்தல் நிபந்தனைகளுக்கமைய கேள்வித்தொகையைச் செலுத்தி குத்தகையை நடாத்துதல்வேண்டும். நிபந்தனைகளில் ஏதாவது ஒன்றை மீறுமிடத்து எதுவித நட்டஈடுமின்றி குத்தகை உரிமை இரத்துச்செய்யப்படும். எந்தக் கேள்வியையும் ஏற்கவோ அன்றி நிராகரிக்கவோ விசேட ஆணையாளருக்கு அதிகாரம் உண்டு. குத்தகை நிலுவை உள்ளவர்களுக்குக் கேள்விப்பத்திரம் வழங்கப்படமாட்டாது. தனியார் காணிகளில் இறைச்சிக்கடை நடத்துவதற்குக் காணிச் சொந்தக்காரரிடம் அனுமதிக்கடிதம் பெற்று சமர்ப்பிக்கப்படல் வேண்டும். கேள்வி அறிவித்தல் நிபந்தனைகள் மற்றும் விபரங்கள் தேவைப்படின் கந்தோரில் பெற்றுக்கொள்ளலாம்.

| இல. | குத்தகையின் தன்மை | கே. ப. பணம் | கே. வை. பணம் | மதிப்பீட்டுத் தொகை |
|---|---|---|---|---|
| 1. | திருநெல்வேலி மத்திய சந்தை | 200 00 | 2500 00 | 250 000.00 |
| 2. | திரு. சந்தை து. பா. நிலையம் | 200.00 | 500 00 | 6 750.00 |
| 3. | கொக்குவில் ஆடியபாதம் சந்தை | 200.00 | 1000.00 | 32,500.00 |
| 4 | கோண்டாவில் ஸ்ரேசனடி சந்தை | 200.00 | 100 00 | 650 00 |
| 5. | கோண்டாவில் கிழக்கு மீன் சந்தை | 200 00 | 100 00 | 800.00 |
| 6. | திருநெல்வேலி சந்தை ஆ. இ. கடை இல 1 | 200.00 | 1000 00 | 28.000.00 |
| 7. | திருநெல்வேலி சந்தை ஆ. இ. கடை இல. 2 | 200 00 | 1000.00 | 28.000 00 |
| 8 | மணியம் தோட்டம் மா. இ கடை | 200.00 | 500 00 | 7,000.00 |
| 9. | நாவலடி அரியாலை மா. இ. கடை | 200.00 | 500.00 | 5,750.00 |
| 10. | ஆடியபாதம் சந்தை ஆ இ. கடை | 200.00 | 1000.00 | 17,250.00 |
| 11. | ஆடியபாதம் சந்தை மா. இ. கடை | 200 00 | 1000.00 | 14,500 00 |
| 12 | கொக்குவில் உப-அலுவலகம் ஆ. இ. கடை | 200.00 | 500 00 | 9 500.00 |
| 13. | கொக்குவில் உப-அலுவலகம் மா. இ. கடை | 200.00 | 1000.00 | 23,000 00 |
| 14 | கோண்டாவில் ஸ்ரேசனடிசந்தை மா. இ கடை | 200.00 | 500 00 | 3,500.00 |
| 15. | 327, பலாலி வீதி, ஆ. இ. கடை | 200 00 | 1000.00 | 14,000.00 |
| 16. | 19. இராமநாதன் வீதி, மா. இ. கடை | 200.00 | 1000 00 | 17,500.00 |
| 17 | இணுவில் பஞ்சத்தடி மா. இ. கடை | 200.00 | 1000 00 | 17,500.00 |
| 18. | கோயில் தோட்டம் மா. இ. கடை | 200.00 | 500.00 | 4,000.00 |
| 19. | கோண்டாவில் குமார் வீதி, மா. இ. கடை | 200 00 | 500.00 | 3.000,00 |

நல்லூர் பிரதேசசபை பணிமனை
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
10 - 11 - 1992

ஆ. மகாலிங்கம்
விசேட ஆணையாளர்
பிரதேச சபை, நல்லூர்

[சி-5401]

விக்கப்படுகிறது.

இன்றும்காற்றுடன்கூடியமழை தொடர்ந்து இருக்கும் எனவும் மாலையில் காலநிலை சீராகும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## தொடர்ச்சியான

தும் வெளியேற வேண்டிய நிலையில் உள்ளனர்.

ஆலயங்களின் முன்பாகவும் பாடசாலைகளின் திறந்த வெளி மைதானத்திலும்உள்ள மரங்களின் கீழ் வாழ்ந்த மக்களேமிகப்பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் ஊண் உறக்கமின்றி இரவு வேளையைக் கழிக்க நேரிட்டது. இவர்கள் தமது கைப்பைகள் மற்றும் உடுபுடைவைகளைக் கூட காப்பாற்றமுடியாத நிலையில் தவித்ததைக் காணமுடிந்தது. (ச)

## நாம்

தொண்டமான் தெரிவித்தார்

தமிழ் இளைஞர் கலாசார கூட்டமைப்பின் ஜனசக்தி இளைஞர் கழகத்தின் 3 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் இலவச பாடசாலை சீருடை வழங்கும் வைபவமும் நேற்று கொழும்பு விவேகானந்தா கல்லூரி மண்டபத்தில் நடந்த போது அமைச்சர் தொண்டமான் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும் போது இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்; நாம்எங்கு இருந்தாலும் தமிழை வளர்ப்பதில் இருந்து பின்நிற்கக் கூடாது. வடக்குக் கிழக்கில் நடக்கும் நிகழ்ச்சிகளுக்காக இங்கு கரிநாள் கொண்டாடுகின்றார்கள். அதற்கு தமிழ்க் கட்சிகளும் துணை நிற்கின்றன. இது நமது பரிதாபநிலை என்றுதான் சொல்ல வேண்டும் என்றார்.

## ஹெலி

மார்சல் ரெரன்ஸ் குணவர்த்தனா பார்வையிட்டதுடன் இச் சம்பவம் தொடர்பாக உடனடியாக விசாரணைகளை மேற்கொள்ளுமாறும் பணித்துள்ளார்.

3.30 மணிக்கு வசந்த மண்டப பூசை, 5.00 மணிக்கு இயமசம்ஹார உற்சவம் ஆகியவை நடைபெற உள்ளன.

## வீரச்சாவு

சாமி கோவிலடி கிளிநொச்சி) வீரச்சாவு அடைந்தார்.

12-11-1992 அன்று காலை பருத்தித்துறை கற்கோவளம் பகுதியில் நடந்த விபத்தொன்றில் விடுதலைப்புலிகள் பெண் போராளி வீரவேங்கை தேவகி (சத்தியகலா அருளன் குரும்பசிட்டி, தெல்லிப்பழை வீரச்சாவு அடைந்தார்.

இவ் இரு போராளிகளுக்கும் தமிழீழ விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றனர்.

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

**12-11-92**

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 6638

வடபகுதிக்கு உள்ளே அனுமதித்த வாகன இலக்கம்:

24-4153, 24-6811, 24-4992, 25-3033, 22-4633

வடபகுதிக்கு வெளியே அனுமதித்த வாகன இலக்கம்:-

41-1227, 27-7081, 28-2145, 27-6741, 26-3633, 28-4550, 26-7252, 22-9167, 26-4568, 22-9005, 41-5417, 27-6579 24 6378, 24-207, 27-5217, 43-1019, 24-4350, 42-2364, 27-2089, 24-1685, 40-6979,

உங்கள் வர்த்தக ஸ்தாபனங்களின் பாதுகாப்பை
நாங்கள் உறுதிப்படுத்துகின்றோம்

எமது சேவையின் நோக்கம் நம்பிக்கை நாணயம்

எமது சேவை நீண்டு வளர்ந்துள்ளது

24 மணி நேர இரவு பகல் ரோந்து சேவைகள் தொடர்கின்றன

N
NSP
P

★ வர்த்தகர்களின் உற்ற நண்பன் ★

தொடர்புகட்கு :

நஷனல் பாதுகாப்பு திட்டம்

பதிவு இல. 15770 181/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
கிளை: 25, ஜும்மா பள்ளிவாசல் லேன், யாழ்ப்பாணம்.

அரச சார்பற்ற தனியார், கூட்டுதாபன ஸ்தாபனங்கள்,
வைத்தியசாலைகள் அனைத்துக்கும்
24 மணி நேர நிரந்தர சேவை வழங்கப்படும்.

''சேவை செய்வதே ஆனந்தம் - அதை
திறம்பட செய்வதே பேரானந்தம்''

NSP

**NATIONAL SECURITY PROJECT**

181 /1, *Kasthuriar Road, Jaffaa.* (சி5395)

இப் பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 13ம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.